பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
அக்டோபர் 2019



## குழந்தைகள் உலகின் கதைச்சொல்லி கன்னிக்கோவில் இராஜா

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 அக்டோபர் 1972

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸுர் ரஹ்மான்**
**நெல்லை உலகம்மாள்**
**கவிஞர் தென்றல் கவி**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
**கவிஞர் பாலமுனை பாறூக்**
*ஆலோசகர்கள் :*
**பாட்டரசர் கி. பாரதிதாசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.




நிலா முற்றம் நான்காம் ஐந்தாம் ஆண்டு விழாவில் கவிதாயினி நிறைமதி நீலமேகம் எழுதிய நிலவின் நினைவலைகள் 29.09.2019 அன்று சிறப்பாக வெளியிடப்பட்டது.

இந்நூல் தேவைக்குத் தொடர்புக்கொள்ளவும்

மின்னஞ்சல் : niraimathi.nee@gmail.com



# வாழ்ந்திடச் சொல்கிறேன்
## வாழ்வதல்ல வாழ்க்கை
## வாழ்ந்து காட்டுதலே வாழ்க்கை

**– இசைவாசி**

**ம்ம்ம்...ஏதோ இருக்கேன். என்ன பண்றது பிறந்திட்டோம் வாழ்ந்தாகனும்.**

**என்னத்த சொல்ல ஏதோ போயிட்டு இருக்கு...**

**இவை போன்ற எத்தனையோ பதில்களில ஒருவனுடைய வாழ்க்கையை எடைபோட்டு பார்த்து விடலாம். ஆனால் வாழும் பாதி பேரில் துணிவு இல்லாமல், எதிர் கொள்ளும் திறம் இல்லாமல், சலித்துக் கொண்டிருக்கிறார்கள்.**

வெட்ட வெட்ட துளிரும் மரங்களை போலவே எந்த அளவிற்கு எதிர்ப்புகளை ஒருவன் தாங்கி கொள்கிறானோ அவனும் வளர்கிறான். எதிர்ப்புகளையும் தடைகளையும் தாங்கி கொண்டு அதை தீர்க்கிறவனுக்கும் வலிமை ஏற்பட்டு அவனை வாழ்க்கை பெருமைபட வாழ வைக்கிறது. வாழ்வை திரும்பி பார்க்கும்போது அதை நினைத்து பெருமைப்படும்படி இருக்கிற வாழ்க்கைதான் சுவாரஸ்யம் நிறைந்ததாக இருக்கும்.

அப்பாவின் அதிகாரத்தால் அவமானப் பட்டு வீட்டை விட்டு கோவித்து கொண்டு காசிக்குச் சென்ற தந்தை பெரியார். பிரமாணன் இல்லாத காரணத்தால் திருமண மண்டபத்தில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டார். பசி தாங்கால் அங்கிருந்த எச்சில் இலையை சாப்பிட்டவர் அவர். இந்த 21 ஆம் நூற்றாண்டில் பல சீர்த்திருத்தங்களும் மாற்றங்களுக்கும் பெண்ணிய முன்னேற்றத்திற்கும் ஒரு மிகப்பெரிய காரணமாக இருந்தவர் பெரியார். பல நெஞ்சங்களிலும் அரசாங்க மரியாதையிலும் இன்னும் இவர் வாழ்கிறார் என்றால் பெரியார் வெறுமனே மட்டும் வாழவில்லை. தன்னுடைய வாழ்வை வாழ்ந்து காட்டினார்.

“டேய் உனக்கு வேற பொண்ணே கிடைக்கலையா நம்ம வீட்டு வேலைக்காரிய காதலிக்கிறேனு சொல்ற” என்ற அம்மாவின் அதட்டல்களைக் காதில் ஏற்றிக் கொண்டிருந்த இளைஞன். அவனுடைய காதலி எதிர்பாராத விதமாக அந்த வார்த்தைகளைக் கேட்டு விட்டாள். அந்த இடத்தில் வேறொரு பெண் இருந்திருந்தால் நிச்சயமாகத் துவண்டு போயிருப்பாள். அந்த நிமிடத்தில் அந்த வேலைக்காரியின் வாழ்க்கை மாற்றம் அடைய தொடங்கியது.

வேலக்காரி என்பதாலேதான் தான் அவமானபட்டோம் எப்படியேனும் படிக்க வேண்டும் என்று படிக்க ஆரம்பித்தாள். கல்வி ஒருவனுடைய வாழ்க்கையில் மாற்றத்தை உண்டுபண்ணும் என்பதற்கு இவளும் ஒரு உதாரணம். நன்றாகப் படித்தாள் தன்னுடைய கரத்தையே புற்று நோயின் ஆய்வு பொருளாக எடுத்து கொண்டு தன் கரத்தையே இழந்தவள். பல நோபல் பரிசு பெற்றவள். அவளுடைய கணவனும் நோபல் பரிசு. அவளுடைய பிள்ளையும் நோபல் பரிசு. வருகிறது. வேலைக்காரியாக வாழ்வை தொடங்கிய அப்பெண்மணி வாழவில்லை வாழ்ந்து காட்டினார். தன்னுடைய வெற்றியை யாராலும் முறியடிக்க முடியாத ஒரு வளர்ச்சியை தன் வாழ்வில் ஏற்படுத்திய அப்பெண்மணி மேரிகியூரி தான். மேரிகியூரி வாழவில்லை. வாழ்ந்து காட்டினாள்.

வீட்டிற்கு மளிகை பொருட்களைக் கூட வாங்க வழியில்லாதவன். "எனக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்று கம்பீரமாக பாடியவன். இந்தியாவில் ஆயுதங்கள் தயாரிப்பதற்கு ஆங்கிலேயர்கள் தடை போடவில்லை. அவனுடைய கவிதை திறத்தைக் கண்டு நீ இனி கவிதை, கட்டுரை எழுத கூடாது என்று தடை போட்டது. அக்னி குஞ்சாய் தேச விடுதலைக்கு பாடியவன். தன் நாட்டு மக்கள் தூங்கி விட கூடாது என்பதற்காகவே பாடு பொருண்மைகளில் தாலாட்டை பாடாமல் விட்டவன். தனக்கே உணவில்லை ஆனால் தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் இந்த ஜெகத்தை அழித்திடுவோம் என்று முழங்கி கண்களில் கோபத்தைக் கக்கியவன். அவனைப் பற்றி கவிப்பேரரசு வைரமுத்து "பாரதி அதெப்படி எட்டையப்புரத்தில் மட்டும் நெருப்பை சுமந்த கர்ப்பப் பை. நீ பாரதி இல்ல பாரதீ" என்று சொல்வார். ஆண்டாள் பிரியதர்ஷினி "மீண்டும் பிறவி இருந்தால் உன்னை சுமக்க என் கர்ப்பப் பை தயாராக இருக்கும்" என்பார். இத்தனை பெருமைக்கும் சொந்தக்காரன் அவன்.

வெள்ளையனைத் துப்பாக்கியால் சுடாமல் வார்த்தையால் சுட்டவன். "வெந்தே போயினும் நொந்தே மாயினும் நம் தேசத்தினர் உவந்து சொல்வது வந்தே மாதரம்" என்று தேச இளைஞர்களுக்கு சுதந்திரத்திற்கான ஊக்க மருந்தை ஊட்டியவன். அவனே பாரதி. பாரதி வாழவில்லை வாழ்ந்து காட்டியவன்.

தம்பிதான் தன்னுடைய அச்சுக் கூடத்தில் வெளியாகும் பத்திரிகைக்கு கட்டுரை எழுதினான் என்று தெரிந்தும் அவனை அழைத்து பாராட்டாமல் அடித்து விரட்டினான். தம்பி வோறொரு பதிப்பகத்தில் வேலை பார்த்துக் கொண்டே பல நூல்களைத் திருத்தும் சாக்கில் அந்நூலை வாசித்து விடுவதும் வழக்கம். வாசிப்பதில் பேரார்வம் கொண்ட அவன் சொந்த நூலை வெளியிட வேண்டும் என்ற முனைப்பிலே தந்தையை உதவி கேட்கும் போது தந்தை மறுத்து விடுகிறார். அதன் பிறகு தன்னுடைய சம்பாத்தியத்திலே பல நூல்களை வெளியிட்டு சமூக மதிப்பைப் பெற்றவன் பெஞ்சமின் பிராக்ளின். இன்றும் அவனுடைய எழுத்தும் அவனும் நிரந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பெஞ்சமின் பிராக்ளின் அண்ணனுடைய அதிதாரத்திலும் அப்பாவின் ஏமாற்றுத்தலுக்கும் சோர்ந்து போகவிலலை. பெஞ்சமின் பிராக்ளின் வாழவில்லை. வாழ்ந்து காட்டியவர். வாழ்ந்து காட்டியவர்களுடைய வாழ்க்கை நமக்கு ஒரு முன் உதாரணமாக இருந்து நமக்கும் நம்பிக்கைக்கும் வழிகாட்டுகிறது. வாழ வழி இல்லாமல் இல்லை. அத்துணை வழிகளும் நாம் நடப்பதாலும் தேடுவதாலும் கிடைக்கின்றன.

தோற்பது எல்லாம்
தோல்வி இல்லை
எதுவும் செய்யாமல்
வாழ்ந்து விடுவதே தோல்வி

- இசைவாசி

நோய்க்கான தடுப்பூசியில் கூட எதிர் விளைவை கொடுக்கும் கிருமிகளைத்தான் நம் உடம்பினுள்ளே செலுத்துகிறார்கள். ஒரு நேர்வினையில் எதிர்வினை மோதினால்தான் மின்னிழையில் ஒளி உண்டாகும். இது

இயற்பியலின் தத்துவம் பல்பின் தத்துவம். வாழ்க்கையும் பல்பு மாதிரிதான். எதிர்மறைகளை எதிர்க்காமல் நம் வாழ்வு ஒளிர்ந்து விடுவதில்லை. ஒளிருங்கள் எதிர்ப்புகளைத் தாங்கி கொண்டு.

சிலருடையவாழ்க்கையின்தியாகம்தான் பலருக்கு இனிமையான வாழ்க்கையைத் தந்திருக்கிறது. அப்படி வாழ்ந்தவர்கள் வாழ்ந்து காட்டியவர்கள் ஆகிறார்கள்.

ஆப்பிர்க்க கருப்பின மக்களை இயந்தி ரத்தைவிடமோசமாகவேலைவாங்கினார்கள் வெள்ளையர்கள். அடிப்படை உரிமை கூட மறுக்கப்பட்டது. அந்தச் சித்ரவதையை எதித்தார் நெல்சன் மண்டேல. அதனால் சிறையில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக தன்னுடைய வாழ்நாளை முடித்தார். தென்னாப்பிரிக்காவின் இன்னொரு காந்தி என்று போற்றப்பட்டார்.

வழக்கம் போல நீங்கள் வலது பக்கம் தானே துண்டை போடுவீர்கள். இன்று ஏன் இடது பக்கம் போட்டிருக்கிறீர்கள் என்று பத்திரிகையாளரின் நச்சரிப்பு கேள்விக்கு வலது பக்கம் கிழிந்திருக்கிறது அதை மறைக்கவே இடது பக்கம் துண்டை போட்டிருக்கிறேன் என்றார் கல்விக்கண் திறந்த காமராஜர். காமராஜர் தன் வாழ்க்கையை வாழவில்லை. வாழ்ந்து காட்டினார்.

கண் பார்வை இழந்து கேட்கும் திறனை இழந்து பேசும் திறன் இழந்து வாழும் சோதனை வந்த போதிலும் சோகப்படாமல் வழ்க்கையை உயர்த்தி காட்டியவர் ஹெலன் ஹெல்லா. அவர் வாழவில்லை வாழ்ந்து காட்டியவர். இவர்கள் எல்லாம் நம்மை போல வாழ்ந்தவர்கள் கிடையாது. வாழ்ந்து காட்டி வாழ்ந்தவர்கள்.

இப்போதுள்ள நிலையில் இருந்து சற்றே உயர்ந்து காட்டுவதே வாழ்வதற்கான அர்த்தமாகும். நமக்கு இருக்கும் வாழ்க்கை தான் விலங்குகளுக்கும் உண்டு. ஆனால் விலங்குகளை நாம் வாழ்கிறது என்று

# பத்து விரல்கள்

1
ஆயிரம் இதழ்கள் ஆயினும் மலரே
பாயிரம் முகமே பாடல் பலவே
ஆயும் மனமோ ஆயிரம் ஆண்டே
தாயினும் சேயே செல்வச் செண்டே!
2
கைக ளிரண்டும் கருணை விதையே
மேக மழையோ மேவும் கொடையே
தாகந் தீர்க்கும் தண்ணளி யாளே
சோகம் ஏனோ சுடுசொல் சுகமோ?
3
வறுமை வாழ்வு வாட்டும் நோயே
அறிவுக் கருவி ஆற்றல் வினையே
இறுதி மூச்சும் எழுத்தொடு இசையே
உறுதி பயக்கும் பத்து விரலே!
4
பத்து விரல்கள் படையல் வாழ்வு
முத்துக் குளியல் முழுதும் விரலே
சொத்து சுகமும் சுடர்விடு முகமும்
மெத்தை சுகமும் மெல்விர லுழைப்பே!
5
உழைப்புப் பூக்கள் உதிர்க்கும் வியர்வை
உழக்கும் பதக்கே ஊருணி நிலையே
கிழட்டுச் சூரியன் கீழ்திசைக் கதிர்கள்
எழுப்பும் விரலோ எங்கும் பகலே!
6
விரல்கள் விரிய வினைபல வாகும்
வினைபல வாக துணைபல வாகும்
துணைபல வாக துயரம் ஏது
ஏதுக்க ளிங்கே என்றும் எதிரே!
7
விரல்கள் பத்தோ இல்லை கோடி
விரட்டும் வறுமை இருட்டிலும் தேடி
இருந்திட உள்ளம் ஏற்றிடும் தொல்லை
பருந்தென சிறகை விரித்தே வானில்!
8
கரமும் சிரமும் கடமை மறந்திட
பொருளும் அருளும் பொய்த்திடக் கேடே
பெருமை விரல்கள் பிடித்திட கருவி
உரிமை உலகே உவகை உயர்வே!

**- பாவலர் சீனி பழனி எம் ஏ**

சொல்வதில்லை. அது இருக்கிறது என்றே சொல்கிறோம். இருத்தலுக்கும் வாழ்தலுக்கும் வித்தியாசம் உண்டு. பிறவிபயன் என்பதே பயனுள்ள வாழ்வை வாழ்வதில்தான் இருக்கிறது.

அடுத்தவரை விட உயர வேண்டும் என்ற எண்ணமே பல மனிதர்களின் உயரங்களுக்குக் காரணமாகி விடுகின்றன.

உங்கள் உயரங்களைத் தீர்மானியுங்கள்.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தன்னம்பிக்கை உரையாற்றி வரும் நான் ஒரு பள்ளியில் சிறப்புரை வழங்க அழைக்கப்பட்டிருந்தேன். உரையின் இடையே மாணவர்களை நோக்கி கேள்விகளை கேட்டு சரியான பதில்களை அளிக்கும் மாணவர்களை மனதாரப் பாராட்டி அமர வைப்பேன். சக மாணவர்களை கைத்தட்ட சொல்லி பதில் சொன்ன மாணவரை ஊக்கப்படுத்துவேன். அவ்வாறு அந்தப் பள்ளியில் ஒரு கேள்வி கேட்டேன். முன்னாள் பிரதமர் யார்? என்பதுதான் அந்தக் கேள்வி. ஒரு மாணவன் விரைவாக எழுந்து பதிலுரைத்தான். மதிப்பிற்குரிய மன்மோகன் சிங் என்றான். 9-ஆம் வகுப்புபடிக்கும்அரசுபள்ளிமாணவன் அவன். பதிலை சொன்னதும் வகுப்பு வழிய கைத்தட்டல்கள் எழுந்தது. ஐயா நான் ஒரு கேள்வி கேட்கட்டுமா? என்றான் என்னை பார்த்து. சிக்கலான கேள்வியைக் கேட்பானோ! பயம் எனக்கு.

மன்மோகன்சிங் பிரதமாராவதற்கு முன் என்னவாக இருந்தார்? அவனுடைய கேள்வி. எளிதான கேள்விதான் பேராசிரியராக இருந்தார் என்றேன். அதற்கு அவன் இல்லை. பிரதமராகும் தகுதியோடு இருந்தார் என்னும் விசித்திர பதிலைத் தந்தான். என்னவாகப் போகிறோம் என்பதற்கான தகுதிகளை வளர்த்து கொள்கிற போது நமக்கு அது கிடைத்தே தீரும் என்ற உணர்வை அவன் பதில் அளித்தது.

ஒரு பனம் பழத்தின் விதைக்குள் நீண்ட நெடிய பனைமரம் உயிர்ப் பெறும். ஒரு மிகச் சிறிய ஆல விதையில் பெரிய ஆலமரம் உருவாகும். ஒரு நுண்ணிய துகளில் எலக்ட்ரான் நியூட்ரான் புரோட்டான் என்ற இயற்பியலின் ஆற்றல் வெளிப்படும் துகள்கள் காற்றாகிறது. காற்று புயலாகிறது. சூறாவளி ஆகிறது.

# தன்னம்பிக்கை

துளைக்கப் பட்டோமென்று
துவளவில்லை மூங்கில்கள்!
மாலையில் வீழ்வோமென்று
மலராமல் இல்லைமலர்கள்!

வீழ்ந்து விட்டோமென்று
விருட்சம் ஆகாமலில்லை விதைகள்!
சிதைக்கப் பட்டோமென்று
சிலைகள் ஆகாமலில்லை பாறைகள்!

சேகரிக்கும்தேன் தனக்கில்லையானாலும்
சேர்க்காமல் இருப்பதில்லை தேனீக்கள்!
விளைந்ததும் வெட்டப்படுவோம் என்றாலும்
விளையாமல் இருப்பதில்லை பயிர்கள்!

தோல்விகள்,
சோதனைகள்,
ஏமாற்றங்கள்,
தடங்கல்கள், எதுவாகிலும்
தன்னம்பிக்கை கொள்!

மாற்றம்வரும்
மகிழ்ச்சி தரும்,
வழிகள்பல திறக்கும்,
வாழ்வோம் சிறப்போடு,
வாழ்க்கை வாழ்வதற்கே!

**ஃபாத்திமா ஹமீத்**
ஷார்ஜா.

மனிதனுக்குள்ளும் மிகச்சிறந்த விருட்சம் இருக்கிறது. அதை வெளிக்காட்ட அவரவா வாழ்க்கையை வாழ்ந்த காட்டுங்கள். ஆயிரக் கணக்கான விந்தணுக்களோடு போரிட்டு கடைசியாகத் தப்பித்து வாகை சூடிய ஒரே ஒரு விந்தணுவின் விருட்சம்தான் இந்த மனித பிறவி. விலங்காய் பிறக்காமல் மனிதனாய் பிறந்ததற்கே நாம் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

இதிலும் சிலர் ச்ச்சே நாம் பறவையா பிறக்கலஎல்லாவிலங்கும்பயப்படுகிறசிங்கமா பிறக்கல பிரச்சன இல்லாம தண்ணிலேயே வாழ்ற மீனா பிறக்கல என்றெல்லாம் இந்த வாழ்வை வெறுத்த வர்கள் இப்படியே புலம்பி புலுங்கி உப்பு சப்பில்லாமல் போய் விட்டார்கள். அரிது அர்து மானிடராய் பிறத்தல் அர்து என்று என் ஔவை இப்பிறவியை வாழ்த்தி பேசுவாள். இந்த பெரிய பாக்கியத்தை கையாள தெரியாமல் வஞ்சிக்கிறோம். இந்த உயிர்க்கான மதிப்பை மறந்து விடுகிறோம். விலை கொடுத்து வாங்க முடியாததில் இந்த உயிரும் ஒன்று.

பிறக்கும் போதே போராடி நாம் வாழும் போது போராட முடியாமல் போய் விடுமா என்ன? போராடினவர்கள் வாழ்கிறார்கள். தற்கொலை செய்து கொள்ள எண்ணம் கொண்டவர்கள் யோசிக்க வேண்டும். இந்த வாழ்வு இன்னொரு முறை கிடைக்காது.

கவலைபடுபவனுக்கு ஒவ்வொரு விநாடியும் மரணம். மரணத்தைப் பார்த்து சந்தோசப்படுகிறவனே மனிதனாய் பிறக்க தகுதி பெறுகிறான். தற்கொலை என்பது அடுத்தவர்களை பரிதாபத்தோடு பார்க்க வேண்டும் என்பதற்காகவே செய்து கொள்வது என்று மனவியல் சொல்கிறது. செத்த பிறகு அந்த பரிதாபத்தை வைத்து கொண்டு என்ன செய்வீர்கள்? யாரும் பரிதாபப்படவில்லை என்றாலும் நம் வாழ்க்கை நமக்கே விதிக்கப்பட்டதாகும்.

உங்களுக்கும் கீழே பல பேர் வாழ்கிறார் கள். வாழ்ந்து காட்டுங்கள்.

# அசைந்தாடி வருவாய்...

மது கண்டேன் மயங்கவில்லை,
அமுதுண்டேன் ஆசையில்லை!
உன் பேச்சிலே தடுமாறினேன்!
விழி வீச்சிலே தூளாகினேன்!

இதழ் மொழி கேட்கயிலே,
இள ரத்தம் கொதிக்குதடி,
உன்னுடல் மொழிக் கூறுகளை
சொல்ல வார்த்தைகள் ஏதடி?!

சின்னஞ் சிறு வயதில் கண்ட
பிறை நிலவு இல்லை!
இன்று வானமாக விரிந்ததே
அழகின் எல்லை!
உன் விரல்கள் பிடித்து,
நகம் கடித்த பொழுது...
நினைவுகள் கீறுதடி!
மென் விரல்களை பிடித்து
கடற்கரை எங்கும்
நடந்திட தோணுதடி !

இதழ் மொழி கேட்கயிலே
இள ரத்தம் கொதிக்குதடி,
உன்னுடல் மொழிக் கூறுகளை
சொல்ல வார்த்தைகள் ஏதடி?!

திமிரி நிற்கும் செந்தேகம்,
ரதம் எனக் கண்டேன்,
மனதை பூட்டி பார்வை
வடத்தை கோர்த்து நின்றேன்,
அசைந்தாடி வருவாய்,
அழகே அன்பைத் தருவாய்,
மோகங்கள் தீரட்டும்,
யாகங்கள் மூளட்டும்...
தேகங்கள் மறப்போமே!

அவசியம் கடைபிடிக்க வேண்டிய

# ஆரோக்கிய குறிப்புகள்

1. பசிக்கும்போது மட்டும் சாப்பிடுங்கள். தாகமெடுத்தால் தண்ணீர் குடியுங்கள். குளிர் பானங்களை தவிர்த்து விடுங்கள்.

2. பசிக்கும் போது பயமில்லாமல் பிடித்த உணவை போதுமான அளவு சாப்பிடுங்கள். பசிக்கும் போது எந்த உணவு சாப்பிட்டாலும் அது இலகுவாக ஜீரணமாகிவிடும். உணவை நிதானமாக மென்று சாப்பிடுங்கள். டிவி பார்த்துக் கொண்டு சாப்பிடாதீர்கள்.

3. தரையில் அமர்ந்து சாப்பிடுங்கள். உங்கள் கை விரல்களால் சாப்பிடுங்கள். கை இல்லாதவர்களுக்குத் தான் ஸ்பூன் தேவை. உங்கள் ஜீரணத்திற்கும் விரல் களுக்கும் தொடர்பு உள்ளது.

4. இயற்கை உணவு மற்றும் பழங்களை தேவையான அளவு எடுத்துக் கொள்ளுங்கள்.

5. பதப்படுத்தப்பட்ட உணவுகளையும், குளிர் சாதனப் பெட்டியில் வைத்த உணவுகளையும் தவிர்த்துவிடுங்கள்.விளம்பரம்செய்யப்படுவதை ஒருபோதும் வாங்காதீர்கள்.

6. பசிக்கும்போது மட்டுமே சாப்பிடுபவர் களுக்கு உடற்பயிற்சி தேவையில்ல.

7. தினமும் முடிந்த அளவு விளையாடுங் கள். விளையாட்டு சிறுவர்களுக்கு மட்டுமல்ல.

8. ஒரு நாளைக்கு 10 நிமிடமாவது தனிமையில் அமைதியாக இருந்து சிந்தியுங்கள். உங்கள் ஆற்றல் வெளிப்படும். அவ்வப்போது மனதுக்குள் சிறிது நேரம் பிரார்த்தனை செய்யங்கள் .

9. டிவி பார்ப்பதை குறைத்துக் கொண்டு நிறைய நல்ல புத்தகங்களைப் படியுங்கள். பிள்ளைகளுக்கு நல்ல நிஷயங் களை சொல்லிக் கொடுங்கள்.

10. குழந்தைகளிடம் Smart Phone களை கொடுக்காதீர்கள். தேவையற்ற விஷயங் களுக்காக Whatsup, Facebook போன்ற சமூக வலைதளங்களில் உங்கள் நேரத்தை வீணடிக்காதீர்கள்.

11. குறைந்தது 7 மணி நேரம் தூங்குங்கள். இரவு 10 மணிக்கு முன் தூங்கிவிடுங்கள். காலை 5 மணிக்குமேல் தூங்காதீர்கள்.

12. தினம் 20 நிமிடங்கள் ரிலாக்ஸாக நடைப் பயிற்சி மேற்கொள்ளுங்கள். (உடற்பயிற்சிக்காக அல்ல மன அமைதிக்காக)

13. உங்களை ஒருபொழுதும் மற்றவருடன் ஒப்பிடாதீர்கள். அவர்கள் பயணிக்கும் பாதை வேறு. உங்கள் பாதை வேறு. அடுத்தவரைப் பார்த்து பொறாமை கொள்வது நேர விரையம். உங்களுக்கு தேவையானது உங்களிடமே உள்ளது.

14. எப்போதும் மனதில் நேர்மறையான எண்ணங்களை மேற்கொள்ளுங்கள்.

15. கடுமையாக உழைக்காதீர்கள். உங்க ளால் முடிந்த அளவு வேலை செய்யுங்கள். அளவுக்கு மீறி எதையும் செய்யாதீர்கள்.

16. மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசுவதில்

உங்கள் சக்தியை வீணாக்காதீர்கள். உங்களைப் பற்றி புறம் பேசப்படுவதை பொருட்படுத்தாதீர்கள்.

17. நீங்கள் விழித்திருக்கும் பொழுது உங்கள் தேவைகளைப் பற்றி நிறைய கனவு காணுங்கள். அதை செயல்படுத்தவும் முயற்சி செய்யுங்கள்.

18. உங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை தானமாக கொடுத்து விடுங்கள். தேவை உள்ளவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

19. கடந்த காலத்தை மறந்து விடுங்கள். முடிந்தது முடிந்தவையாக இருக்கட்டும். நிகழ் காலத்தில் வாழுங்கள். மகிழ்ச்சியும் மன அமைதியும் தானாக வரும்.

20. குறுகிய கால இந்த வாழ்க்கையில் யாரையும் வெறுக்காதீர்கள். வெறுப்பு உங்களை தான் பாதிக்கும்.

21. வாழ்க்கை ஒரு பள்ளிக்கூடம். நீங்கள் கற்றுக் கொள்ள வந்திருக்கிறீர்கள் சிக்கல்களும், பிரச்சனைகளும் இங்கு பாடங்கள்.

22. முடியாது என்று சொல்லவேண்டிய இடங்களில் தயவு செய்து முடியாது என்று சொல்லிவிடுங்கள். இது பல பிரச்சனைகளை ஆரம்பத்திலேயே தீர்த்துவிடும்.

23. வெளிநாட்டிலோ வெளியூரிலோ இருந்தால் குடும்பத்தில் இருப்பவர்களுக்கும், நண்பர்களுக்கும், வேண்டியவர்களுக்கும் அடிக்கடி தொலைபேசியிலோ, SMS மூலமாகவோ தொடர்பு கொண்டிருங்கள். இது உங்களுக்கும் அவர்களுக்கும் மன அமைதியையும், பரஸ்பர அன்பையும் மேம்படுத்தும்.

24. மன்னிக்கப் பழகுங்கள். தேவையான நேரத்தில் தயங்காமல் மன்னிப்பும் கேளுங்கள். உங்கள் மனபாரம் நீங்கும்.

25. 60 வயதிற்கு மேலிருப்பவர்களையும், 6 வயதிற்கு கீழிருப்பவர்களையும் கவனிக்க நேரம் ஒதுக்குங்கள். அவர்களுக்கு உங்கள் அன்பு தான் முக்கியம். பணம் முக்கியமல்ல.

26. அடுத்தவர்கள் என்ன நினைப்பார்களோ என்பதைப் பற்றி ஒருபொழுதும் கவலை கொள்ளாதீர்கள்.எப்பொழுதும்உங்களைப் பற்றி நினைப்பது மாற்றவர்களின் வேலையல்ல.

27. உங்கள் நண்பர்களை மதிக்கப் பழகுங்கள். உங்கள் மனதிற்கு எது சரி யென்று படுகிறதோ அதை உடனே செய்யுங்கள்.

28. உங்களின் நிறைவேறிய தேவைக்கு இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள். நிறைவேறாத தேவைக்கு பிரார்த்தனை செய்யுங்கள்.

29. உங்கள் ஆழ்மனதில் இருப்பது சந்தோஷம் மட்டும்தான். அதை தேடி அனுபவித்துக் கொண்டே இருங்கள். அவ்வப்போது உங்களிடம் உள்ள நல்லவைகளை நினைத்து பெருமிதம் கொள்ளுங்கள்.

30. உங்களுக்குஎதுசந்தோஷத்தைகொடுக்காதோ, அன்பை கொடுக்காதோ, நிம்மதியைக் கொடுக்காதோ அதை ஒதுக்கி விடுங்கள்.

31. வாழ்க்கையில் எதுவும் நிரந்தரமல்ல. கவலைகளும், நோய்களும் கூட...

32. எந்த சூழ்நிலையும் ஒரு நாள் கண்டிப்பாக மாறும்.

மலச்சிக்கல் இல்லாமல் எழுவதும், மனச்சிக்கல் இல்லாமல் தூங்குவதும்தான் ஆரோக்கியம்.

இதை கடைபிடியுங்கள் உங்கள் வாழ்கை ஆரோக்கியமாக இருக்கும்.

**- மஞ்சு மஞ்சேஷ்வரன்**

# வெளிநாடு வாழ்க்கை

மூத்தவனாய் பிறந்தது உன் தப்பாபோச்சு
சுமையில் பாதியும் உனக்குன்னு ஆச்சு
பள்ளிக்கு போறதையும் மறக்க வைச்சு
பணத்தை சேர்க்க வெளிநாடு போயாச்சு

பள்ளிக்கு விடுப்பு முழுசா கொடுத்தாச்சு
பச்சிளம் வயதில் பெற்றோரை விடுத்தாச்சு
குடும்ப வளர்ச்சிக்கு ஆசையைத் துறந்தாச்சு
சமயம் வருமென காலத்தையும் கடந்தாச்சு

வாலிபனாய் வளர நாட்டுக்கே வந்தாச்சு
வரன்தான் அமைய திருமணமும் செஞ்சாச்சு
திருமணம் முடிஞ்சதோட வெளிநாட்டுக்கு போயாச்சு
மனைவிக்கிட்ட குழந்தை பாரத்தையும் கொடுத்தாச்சு

பாசமான மனைவியுடன் வாழவும் மறந்தாச்சு
தந்தை பாசத்திற்கு குழந்தைகளும் ஏங்கிருச்சு
மனைவி வாழ்க்கை போராட்டமே ஆகிடுச்சு
வாழ்க்கை போராட்டம் வாழத்தான் பழகிடுச்சு

குடும்பம் பெரிசாக பொறுப்பும் வலுத்தாச்சு
பணத்தை சம்பாதிக்க மனசும் கல்லாகிடுச்சு
குடும்பத்தை பிரிஞ்சு வருஷமும் ஆகிபோச்சு
குழந்தைகளும் உன்னை மறந்தே பழகிடுச்சு

மனசத்தான் கல்லாக்கி குடும்பத்த பிரிஞ்சுட்ட
ஆசையை மூட்டைகட்டி அலமாரியில் பூட்டிப்புட்ட
அப்பான்னு ஆசைக்கு கூப்பிடத்தான் எங்கிருந்த
அப்பா இருந்தும் பாசத்துக்கு ஏங்கவைச்ச

கொண்டுவரும் மிட்டாய்தான் குழந்தைகளை மயக்கிடுமா
வாங்கிவந்த சேலைதான் வாழ்க்கையை மாத்திடுமா
சேர்த்துவச்ச பணம் சேர்த்துதான் வைச்சிடுமா
சேராத வாழ்க்கை முழுமையும் அடைந்திடுமா

நாள்தோறும் வேலைசெஞ்சு உடம்பத்தான் கெடுத்துக்கிட்ட
நாங்கள் நல்லாருக்க வாழ்வதற்கே மறந்திட்ட
நாயகனாய் எங்களுக்குள் நீயேதான் வாழ்ந்திட்ட
நான்பட்ட கடனெல்லாம் எப்போநான் அடைச்சிட

வயசு எழுபதாகியும் வரத்தான் மனசில்லை
வாழவிட்ட வாழ்க்கையை தொடரத்தான் விருப்பமில்லை
பேரன் பேத்திகளும் தாத்தானு கேட்டிடுச்சு
கிளம்பி வந்துடுங்க நாங்களும் கூப்பிடுறோம்

**மணிமாறன் கதிரேசன்**



# காய்நெல்லும் கவளயானையும்

**குரு. மாதாகிருட்டிணன்**
சேத்தூர்

“அறிவுடை நம்பீ! இந்தச் செயல் உனக்கே நன்றாக இருக்கின்றதா?”

“நீங்கள் எந்தச் செயலைக் குறிப்பிடுகிறீர்கள் பிசிராந்தையாரே?” “அரசாட்சியில் உள்ளவர்களுக்கு மக்களை அடக்கி ஆளவும் அதிகாரம் செய்யவும் தெரிந்தால் மட்டும் போதாது மக்களின் கஷ்டநஷ்டங்களை உணர்ந்து கொள்ளவும் தெரிந்திருக்க வேண்டும்.”

“திரும்ப திரும்பப் பூடகமாகப் பேசுகிறீர்களே ஒழிய, விஷயத்தைத் தெளிவாகச் சொல்லமாட்டேன் என்கிறீர்களே”

“தெளிவாகச் சொல்லவேண்டிய விஷயம் தான் நம்பீர்”

“நீங்கள் சொல்லி, நான் கேட்க மறுத்தது உண்டா புலவரே! சொல்லுங்கள்; தவறு என்புறம் இருக்குமாயின் உடனே திருத்திக் கொள்ள முயல்கிறேன்.”

“ஒரு மா அளவுள்ள சிறிய நிலமானாலும் அல்லது அதற்கும் குறைந்த நிலமாகவே இருந்தாலும், அந்நிலத்தில் முற்றி விளைந்த பயிரை அறுவடை செய்து தானியத்தைச் சேகரிக்க வேண்டும். அவ்வாறு சேகரித்ததானியத்தைச் சோறாகச் சமைத்து ஒரு பெரிய யானைக்குப் பசித்தபோதெல்லாம் கவளம் கவளமாக வாரிக் கொடுத்தாலும் அது பலநாள் காணும்..”

“நீங்கள்விஷயத்தைச்சொல்கிறீர்களா? அல்லது சிறு குழந்தைகளுக்குப் பொழுது போவதற்காகச் சொல்வார்களே, அந்த மாதிரி ஏதாவது யானைக் கதை, குதிரைக் கதை சொல்கிறீர்களா?”

“முழுவதும் கேள் நம்பி! அதற்குள் பொறுமை இழந்து விடுகின்றாயே..?”

“நூறுசெறு(நிலத்தின்ஓரளவு)அளவுடைய பெரிய நிலமாக இருந்தாலும் அதில் விளைந்த பயிரை அறுவடை செய்யாமலே இந்தப் பெரிய யானையை அவிழ்த்துவிட்டு விடலாம்! அப்பொழுது என்ன ஆகும்? இந்த யானை வயலுக்குள் புகுந்து நெற்கதிர்களை உண்ணும். அப்படி உண்ணும்போது அது உண்ணக்கூடிய தானியத்தைக் காட்டிலும் அதன் பெரிய கால்களால் மிதிபட்டு உதிர்ந்து வீணாகிற தானியமே அதிகமாக இருக்கும்!”

“சிறிய நிலமானாலும் பயிரைமுறையாக அறுவடைசெய்து கவளம் கவளமாக யானை வாயில் தள்ளினாலும் அது யானைக்குப் பலநாள் காணும். பெரிய நிலமானாலும் அறுவடை செய்யாமலே யானையை நிலத்திற்குள்ளேயே நுழைய விட்டு விட்டால் அது ஒருமுறை உண்பதற்குள் நிலம் முழுவதும் மிதிபட்டுப் பயிர் அழிந்து போகும்...!”

“உம்ம். சரி! அப்புறம் மேலே சொல்லுங்கள்...”

“கதை சொல்லவில்லை நான்! அரசன் யானையைப் போன்றவன். குடிமக்கள் விளைந்த பயிருடனே கூடிய விளை நிலங்களைப் போன்றவர்கள்...!”

“உங்கள் உவமை மிகவும் அழகாக இருக்கிறது.”

“அழகாக மட்டுமிருக்காது! கொஞ்சம் ஆழமாகவும் இருக்கும். மேலே கேள்; அறிவுணர்வு மிக்க அரசன் மக்களிடம் முறைகேடற்ற விதத்தில் வரிப்பணத்தைப் பெற்றுக் கொண்டால் அவன் செல்வம் கோடி கோடியாகப் பெருகும். நாடும் வளர்ச்சியடையும். ஆக்கம் பெறும். அறிவுணர்வு குறைந்த அரசன்நாள்தோறும் தரமறியாமல் வீண் ஆரவாரங்களைச் செய்கிற சுற்றத்தினரோடு கூடி மக்களின் அன்பு கெட்டுப்போகுமாறு அவர்களிடம் வற்புறுத்தி அதிக வரியும் தண்டமும் பறிக்க முயன்றால் யானை நுழைந்த நிலம்போலத் தானும் உண்ணமுடியாமல் பிறருக்கும் எஞ்சாமல் வீண் அழிவே ஏற்படும்.”

இதைக் கேட்டு அறிவுடை நம்பி திகைத்தான்.

“என் நாட்டில் இந்த முறைகேடு எங்காவது நிகழக் கண்டீர்களா புலவரே?” அவன் குரலில் பரபரப்பும் ஆத்திரமும் மிகுந்திருந்தன.

“கண்டதனால்தான் இந்த யானைக் கதையையும்இதைஒட்டியஅறிவுரையையும் கூற நேர்ந்தது.”

“எங்கேகண்டீர்கள்?” “ஏன்? உன்னுடைய கவனக்குறைவைப் பயன்படுத்திக் கொண்டு உன்னைச் சேர்ந்தவர்கள் பல இடங்களில் மக்களுக்கு இந்தக் கொடுமையைத் தயங்காமல் செய்து வருகிறார்கள்”.

“உடனே இந்த விஷயத்தைக் கவனிக்கிறேன் பிசிராந் தையாரே! சிறிதும் அஞ்சாமல் என்னை அணுகி இதைக் கூறியதற்கு என் நன்றி. உங்கள் துணிவு போற்றற்குரியது!”

“போற்றுதலை எதிர்பார்த்து உன்னிடம் இதைக் கூற வரவில்லை. உங்களைப் போன்றவர்கள் வழிதவறிவிட்டால், இது வழியல்ல, அதோ அதுதான் வழி என்று சுட்டிக் காட்டுவதற்காகத்தானே புலமையைத் தொழிலாகக்கொண்டுநாங்கள்வாழ்கிறோம்.”

“போற்றுதலை எதிர்பாராத நிலை இந்த உலகாளும் தொழிலைவிட உயர்ந்தது புலவரே! ஏன் தெரியுமா? உலகாள் பவர்களையார்ஆளமுடியும்? புலவர்கள்தாம் மன்னர்களையும் ஆளுபவர்கள். அவர்கள் வெறும் மனிதர்களில்லை. தெய்வங்கள்.”

“நிறையப் புகழ்ந்து விடாதே நம்பீ” இருவரும் தமக்குள் சிரித்துக்கொண்டனர். யானைக் கதையை நினைத்துச் சிரித்த சிரிப்புத்தானோ அது?

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பல்நாட்கு ஆகும்
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்.

(புறநானூறு - 184)

காய்நெல் = முதிர்ந்த நெல்கதிர்,
கவளம் = சோற்று உருண்டை,
மா = சிறுநிலப்பரப்பு,
செறு = பெரிய நிலப்பரப்பு,
தமித்து = தனியே.

# யாதும் நீயே !!

**- நௌஷாத் கான்.லி**

உலகத்தின் தலை சிறந்த விஞ்ஞானியில் பரதனும் ஒருவன். விஞ்ஞானி என்றாலே குடும்பம் குட்டி என்று இல்லாமல் பணம் கண்டுபிடிப்பு என்று பைத்தியக்காரத்தனமாய் இருப்பார்கள் என்று சாதாரண மக்கள் நினைப்பதுண்டு. ஆனால் பரதன் கோடிக் கணக்கில்சம்பாதித்தாலும்அவன்அவனுடைய வேலையை விரும்பாதற்கு முக்கிய காரணம் அவனுடைய காதல் தான்.. என்று பவித்ராவை பார்த்தானோ அன்றிலிருந்து அவன் விரும்பி படித்த விஞ்ஞானி வேலையை கூட அவன் விரும்பவில்லை. பரதனின் கண்டுபிடிப்பு கடவுளுக்கு சமமானது. பரதனை பொறுத்த வரை அவன் பிரம்மனாக இருந்த போதும், கோடிக்கணக்கில் பணத்தினை உலகநாடுகள் அவன் காலடியில் கொட்டிய போதும் அவற்றையெல்லாம் தூக்கியெறிந்து தன் காதல் தான் பெரிது என பவித்ராவை கரம் பிடித்தான்.

பவித்ராவுடன் எந்த கவலையுமின்றி ஒரு பறவை போல சந்தோஷமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்தான். கடவுளும் சரி-விதியும் சரி ரொம்பவும் விசித்திரமானது இருவருக்குமே நல்லவன் - கெட்டவன் பேதம் தெரியாது.

ஒரு நாள்...

பவித்ராவும் - பரதனும் காரில் பயணம் செய்த போது எங்கிருந்தோ வந்த லாரி நிலை தடுமாறி இவர்கள் பயணம் செய்த காரில் மோதியது.. இருவருக்குமே பலத்த அடி. இருவருமே ஒருதனியார் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்க பட்டனர் ...

சில மாதங்களுக்கு பிறகு ...

பவித்ராவுக்கு சோறு ஊட்டி விட்டான் பரதன். அதில் காரம் அதிகம் இருந்ததால் அவளுக்கு புரையேறியது .தலையை தட்டி விட்டு அவளுக்கு தண்ணீர் கொடுத்தான் ,புதிதாய் பூமிக்கு வந்த குழந்தை போல தண்ணியை சப்பி சப்பி குடித்தாள்.

பவித்ராவுக்கு எப்படி நடப்பது கூட தெரியவில்லை எல்லாவற்றையும் ஒரு தாய் போல பரதன் தான் அவளுக்கு ஒவ்வொன்றாய் பொறுமையாய் பொறுப் போடு சொல்லி கொடுத்தான். இதையெல்லாம் தூரத்திலிருந்து பார்க்கும் அக்கம் பக்கத்தினர் இந்த அம்மாவுக்கு என்ன ஆச்சு? அந்த விபத்து சம்பவத்துக்கு அப்புறம் ரொம்பவே மாறி போச்சே, முன்னெல்லாம் அக்கம் பக்கம் வீட்ல கலகலன்னு பேசுவாங்க இப்போவெல்லாம் வெளியே வர்றதே இல்லையே, அந்தம்மா வீட்டுக்காரும் வேலைக்கு எல்லாம் போறதே இல்லையே, அந்தம்மாவுக்கு உடலளவிலும், மனதளவிலும் ஏதாவது பிரச்சனை வந்திருக்குமா? அதான் அவரு வீட்டுக்காரர் கூடவே இருந்து பார்த்துகிறாரோ? இருந்தாலும் அந்த ஆளு பொண்டாட்டி மேல உசுரையே வச்சிருக்கான் அதான் விழுந்து விழுந்து கவனிக்கிறான் என்று அக்கம் பக்கத்தினர் புரளி பேசினர். அந்த புரளி பரதன் காதுக்கும் எட்டவே அந்த இடத்தில இருக்க விரும்பாமல் இவர்களை யாருன்னே அறியாத

ஒரு இடத்துக்கு செல்ல திட்டமிட்டான்.

சில தினங்களுக்கு பிறகு...

வீட்டு சாமான்களை யெல்லாம் வண்டியில் ஏற்றி இவர்கள் செல்ல வேண்டிய முகவரியை வண்டிக்காரரிடம் தந்தான் பரதன்; வீட்டிலிருந்த பவித்ராவை அழைத்து செல்ல வீட்டுக்குள் நுழைந்தான்...

அப்போது, வெல்கம் பரதன் என்று குரல் கேட்டது.

அங்கு உலக விஞ்ஞானி கழகத்தின் இப்போதைய தலைமை அதிகாரி உட்கார்ந்திருந்தார்.

எங்கே போறீங்க பரதன். எங்கேயோ போறோம் சார், நாங்க போறதை உங்களுக்கு ஏன் சார் சொல்லணும் ?

சொல்லணும் பரதன். நீங்க உங்க பொண்டாட்டியோட போனீங்கன்னா சொல்ல தேவையில்லை ஆனா உங்க குரோமோசோமிலிருந்து உருவாக்கிய குளோனிங் பொண்டாட்டியோட போனீங்கன்னா சொல்லணும் மிஸ்டர் பரதன்.

நீங்க செஞ்சது நியாயமா பரதன்? இயற்கைக்கு முரணான காரியத்தை செஞ்சு இருக்கீங்க? இது எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா ?

சார் நான் செஞ்சது தப்புதான், இயற்கைக்கு முரணானது தான் ஆனா நான் செஞ்ச காரண காரியத்தை பாருங்க ,என் சூழ்நிலையை பாருங்க எத்தனையோ நாடுகள் என்கிட்டே கோடிக்கணக்கான பணத்தை கொட்டி கொடுத்த போதும் இந்த காரியத்தை செய்யாதவன் சார், இயற்கைக்கு முரணா செயற்கையா ஒரு உயிரை உருவாக்கும் போது அதன் நடவடிக்கைகள் எப்படி இருக்கும்னு யாருக்குமே தெரியாது ஆனா விபத்துல என் பொண்டாட்டி பவித்ரா செத்தப்ப இந்த வாழ்க்கையே வேண்டாம்னு தோணுச்சு ஆனா என் பவித்ரா கூட ரொம்ப வருஷம் நான் வாழணும்னு ஆசைப்பட்டேன் சார்... அதான் என் குரோமோசோமிலிருந்து என் பவித்ராவை உருவாக்குனேன்,என் மனசுல கூட இந்த உலக நாடுகளுக்கு கெடுதல் செய்யணும்னு ஒரு எண்ணம் கிடையாது

# உணர்வாய் உணர்த்துவாய்

( பா வகை — கட்டளைக் கலிப்பா )



உளியின் சாதனை தாங்கிய கன்மலை
உருவம் கொண்டொரு நற்சிலை ஆகுமாம்
ஒளியின் தேடலில் தான்மறைந் துள்ளவை
ஒழியொ ணாவிழிக் காட்சியில் சேருமாம்
வளியில் தென்றலும் கோரமாய் மாறுமாம்
வருகை யார்தடுத் தாளுவர் நேருமாம்
தெளிவில் லாக்கணம் எம்முடி வொன்றையும்
தெரிவு செய்வதால் பின்னிலை தோற்குமே..

பைந்தமிழ்ப்பாமணி **ஜெனிஅசோக்**

சார். ப்ளீஸ் என்னை நம்புங்க என் குரோமோசோமிலிருந்து உருவான என் குளோனிங் பொண்டாட்டி நிச்சயமா இந்த உலகத்துக்கு கெடுதல் செய்ய மாட்டா.. நாங்க எங்கேயோ கண் காணாத தேசத்தில் போய் வாழ்ந்திக்குறோம்... எங்களை விட்டிடுங்க சார் .இந்த உண்மையையும் வெளி உலகத்துக்கு சொல்லாதீங்க ப்ளீஸ் சார் என்றான் பரதன்.

நீங்க என்னதான் சொன்னாலும் இயற்கைக்கு முரணான உயிரை இந்த உலகத்தில் வாழ வைக்க கூடாது பரதன். எங்களுடைய கடமையே ஒரு புதிய உயிரை உருவாக்கிட்டு அதன் நடவடிக்கைகளை பார்த்திட்டு கொல்லுறது தான். இதுவரைக்கும் நாங்க உருவாக்குன உயிரெல்லாம் மனித இயல்போட இல்லை. நீங்க உருவாக்குனது மட்டும் தான் மனித இயல்போட அக்குரெட்டா பொருந்தி இருக்குது. நீங்க என்னதான் அக்குரெட்டா ஒரு குளோனிங் உயிரை உருவாக்கினாலும் கொல்லுறது எங்க கடமை.

என் பொண்டாட்டிய அழிக்க நினைக்குறது என்னை அழிக்க நினைக்குறதுக்கு சமம் சார். இந்த உலகத்துல எனக்கு எல்லாமும் அவள் தான். அவளை கொல்லணும்னு நீங்க நினைச்சீங்கன்னா என்னை கொன்னுட்டு அவளை கொல்லுங்க. அவ இல்லாத வாழ்க்கையை சத்தியமா கனவுல கூட நினைச்சு பார்க்க முடியலை. ப்ளீஸ் சார் சத்தியமா நான் உருவாக்குன என் உயிராலே இந்த பிரபஞ்சத்தில் எந்த உயிருக்கும் பாதிப்பு வராது சார்... ப்ளீஸ் சார்... ப்ளீஸ் சார்.

எங்களை வாழ விடுங்க ப்ளீஸ் என கதறினான் பரதன் ..

அவன் பேச்சில் மட்டுமல்ல மூச்சிலும் உண்மை இருப்பதால் அந்த காதல் ஜோடி எங்கேயாவது போய் வாழ்ந்து கொள்ளட்டும் என்று பெருந்தன்மையுடன் வந்த வழியே திரும்பி சென்றார் உலக நாடுகளின் தலைமை விஞ்ஞானி !! ■

# பகைவனுக்கும் அருள்வாய் நன்நெஞ்சே

பெருகி வரும் வெள்ளமது
பேதங்கள் பார்ப்பதில்லை...
பிறப்பிடமென, புகுமிடமென
வேற்றுமையது அறிவதில்லை!

திரண்டு வரும் மேகமது
தேசம் பிரித்து பார்ப்பதில்லை...
வேண்டியோர், வேண்டாதார்
எனப்பார்த்து பொழிவதில்லை!

விதையதுவும், தூவிவிடும்
விரல் நிறத்தை பார்ப்பதில்லை...
யார் பெயரில் நிலமிருக்கு
பட்டா பார்த்து முளைப்பதில்லை!

உனக்கென்று, அவனுக்கென்று
இயற்கையது பிரிக்கவில்லை...
உனதென்று,எனதென்று
பிளவுபட்ட மனதுக்கிது
புரிவதில்லை!

தண்ணீரில் வடிக்கும் எழுத்து
கண்களுக்கு தெரிவதில்லை...
கடல்நடுவில் எல்லைக்கோடு
வரைகின்ற மூடருக்கிது
தெரிவதில்லை!

கருணையுள்ளம் கொண்டுவிட்டால்
பிரிவினைகள் ஏதுமில்லை...
இரக்கம்தனை இரந்துவிட்டால்
இழப்பதற்கு எதுவுமில்லை!

பகைவருக்கும் அருளுகின்ற
நன்நெஞ்சம் படைத்து விட்டால்
நானிலத்தில் நன்மைக்கு
என்றென்றும் பஞ்சமில்லை!

**ம.கமலகண்ணன்**



# அந்தி சாயும் முன்னே

அமைதி நிலவும் அற்புதக் கோட்டம்
வளமை உண்டாக்கி வசந்தம் காட்டும்
இளமை வேண்டுவோர் வாழும் கூட்டம்
இயற்கை நமக்கு அளிக்கும் தோட்டம்

தொலைத் தொடர்பு இல்லாமல் வாழும்
தொல்லைகள் இல்லை நிம்மதி நாளும்
ஆடு மாடுகள் நம்மோடு பேசும்-
மறையும் சூரியனால் கண்கள் கூசும்

மஞ்சள் வண்ணம் மாலையில் தோன்றும்
கொடியில் மணக்கும் அல்லிமலர் விரியும்
செடிகள் அசையும் ஓவியங்கள் வரையும்
இன்பமே விளையும் இருள்வந்து கவ்வும்

தடாகத்தில் தண்ணீர் அலையின்றி இருக்கும்
தவமாக இருக்குமென என்மனம் நினைக்கும்
மஞ்சள்வானத்தில் நிலவு நிழலாக்கிப் பிடிக்கும்
கொஞ்சும் அழகு அங்கு விரிந்து கிடக்கும்

புற்களைக் கடித்த வெட்டுக்கிளிப் பறக்கும்
முற்காலத்தில் வாழ்ந்த வாழ்க்கை மலரும்
கற்கால மனிதனின் வரலாறு உலவும்
பொற்காலம் கொண்டு இன்புறும் நாமும்

கவிஞன் தேடும் இடமும் இதுதான்
கவிதைகள் கொட்டும் அருவியில் சுகம்தான்
புரவி போல பறந்துவரும் வரிதான்
புன்னகை சிந்த வற்றாத நிலம்தான்.

**க.ச.சந்திரசேகரன் சங்கரலிங்கம்**
அவிநாசி

# நானும் காதலித்தேன்

நான் காதலித்தேன்
எழுத்தின் மீது
தீராத காதல் வந்து சேர்ந்தது.

நூறு கவிதைகள் எழுதினேன்..
நூறும் அழுக்கற்று கிடந்தது
தரையில்!

நூற்றி ஒன்றாவது கவிதையை
எழுதி அவனிடம் கொடுத்தேன்!

பதில் வரும்வரை
பசியை தொலைத்து விட்டு.
இன்றுவரை
பைத்தியமாய் காத்திருந்தேன்...

நேரங்கள் சிந்தாமல்
என் வயதை நேசித்து நேசித்து
அவனை நான் நேசித்தேன்!

என் வயதை
தூங்க விடாமல் செய்த
அழகன் அவன்!

என்வாழ்க்கையிலும்
கனவுகளிலும்
கற்பனைக் காதலனாக
வாழ்ந்தவன் அவன்

என் நிஜ காதலன் அல்ல!

**ஃபாத்திமா நஜ்லா,**
ஸ்ரீலங்கா



## போதைதரும் சித்திரம்

சுந்தரியின் கூந்தலிலே
சுகந்தமணம் பரிமளிக்க,

செந்தூரப்பொட்டு வந்து
சிம்மாசனம் போட்டிருக்க,

குண்டுமல்லி பூப்பெய்தி
கொண்டையிலே குடியிருக்க,

கொண்டவளின் விழியிரண்டில்
கெண்டைமீன் அவதரிக்க,

மேலிருக்கும் இமையிரண்டும்
மின்மினியாய் பட படக்க,

முக்கனியும் சர்க்கரையும்
முழுஇதழும் அடைத்திருக்க,

முகிலுக்குள் துயிலிருக்கும்
முழுமதியாய் முகமிருக்க,

கண்பட்டுப் போகுமென்று
வெண்பட்டுச் சேலைக்குள்

வெள்ளிக் குடமிரண்டும்
வெங்கலம் போல் கனக்க,

முப்புரி நூலிடையோ
முழுஎடையும் தாங்கி நிற்க,

போதிமர புத்தனுக்கும்
போதைதரும் சித்திரத்தை

ஆதிமுதல் ஆண்டவனே
பூமியிலே ஏன் படைத்தாய்..??

**சாயீசன்...**

# தீக்குளிர்தல்

இந்தக் காற்றின் சீண்டலில்
விளக்கின் சுடர்
ஊசலாடிக் கொண்டிருக்கிறது...
ஒளிரவா? அணையவா?
நின்று என்னிருப்பை உணர்
ஒளியின் பார்வை தண்டுவடத்தில்.
அணைத்து ஏற்றுக்கொள்
இருளின் ஸ்பரிசம் புறங்கையில்.
நில்லாத காற்று நிலைப்பதில்லை
இருளா? ஒளியா?
தேர்ந்தெடுத்தலின் நிதானம்
மறுக்கப் படுகிற ஆவேசம்.
தன்னிச்சையாய் விரல்கள்
ஏந்திக் குவியும் முனைப்பு.
தொடுவதா? சுட்டு விடாதா?
ஆர்வக் கோளாறின் குறுகுறுப்பு.
தொட்டால் சுடுமெனத் தெரியாதா?
தொடுமின்பம் தீண்டலில் உண்டாமே?
தொட விழைவதைப் பொருத்தது அது.
சுட்டும் இன்பம் தரும் ஒளி.
சுடாது வருத்தும் அந்த இருள்.
தொடத் தேவை மனப்பக்குவம்.
நின்று எரியட்டும் சுடர்!
நீங்கி மறையட்டும் மன இருள்!
தீக்குள் குளிர விடு.. நின்னைத்
தீண்டுமின்பம் தந்து விடு....

**ரத்னாவெங்கட்**

# குருதிக்கொடை

எனக்கு எப்போதும் புரிவதில்லை
பொடி வைத்துப் பேசும் பேச்சில் !
சிந்திக்க நேரம் இல்லாத வேளை
சிதறுதேங்காய் போல்
உடைத்துச் செல்வதில் வல்லவள் !
செவிக்குள் மின்னலாய் வெட்டியது
வெள்ளந்தியாய் வாழ்வதில் இல்லை...
வாழ்க்கைப் பிடிமானம் !
சேவைக்குள்ளும் தன்னல இருப்பு
ஆரோக்கியமாய் இருத்தலே நலன்...!
மீண்டும் மீண்டும் இச்சொற்கள்
மண்டைக்குள் குடைந்தபடி இருந்தன ....
அன்று முழுதும் சக்கர நாற்காலியாய்
மனதுள் சுழன்படி இருந்தது!
அலுவலக நிசப்தத்திலும்
மின்விசிரியின் சத்தம் பேரிரைச்சலோடு
என்னை வெளியே விரட்டியது...
இரத்ததான முகாம் ஒன்று
காத்திருக்கிறது ...
எனது குருதிக்கொடையின் வரவுக்கு!
எது வெள்ளந்தி வாழ்க்கை?
கேள்வியுடன் கால்கள் பயணித்தன....
ஒரு உயிரைக் காப்பாற்றிய
பெருமிதத்தில் நான்....

**கா.ந.கல்யாணசுந்தரம்**

# தன்முனை

## கவிதைகள்

•

வேகமாய் ஓடுது
பயனுள்ள நாட்கள்
நோளியின் நிலமை
கவலை அளிக்குது.

•

நம்மை அறிந்தவர்க்கு
அடையாளம் தெரியும்
அகங்காரம் கொண்டவர்க்கு
ஆணவமே வெளிப்படும்.

**- வா.சண்முகம்**
கும்பகோணம்



# வாழ்க நீ எம்மான்!

முனைவர் பா.சக்திவேல்
**கோயம்புத்தூர்**

அடிமை வெள்ளத்தில் நீந்தி பாரதம் போராடியபோது, காந்தி வந்து கரம் கோர்த்தார். இந்த தேசத்தை கொண்டு கரை சேர்த்தார். வெளி வேசப் பிதாவாக வெகுவானோர் இன்றிருக்கும் போது சுய தேசப் பிதாவாக காத்து நின்றவர். கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுதென்று சத்தியத்தோடு தனது நித்திய கடனாற்றச் சொன்னார்.

சென்ற நூற்றாண்டின் இணையற்ற தலைவருக்காக “தி டைம்ஸ்” இதழ் நடத்திய தேர்வில் பல ஐரோப்பிய, அமெரிக்க, ரஷ்ய மற்றும் உலக ஜாம்பவான்களை பின்னுக்குத் தள்ளி, அகிம்சையை ஆயுதமாக கொண்டு போராடிய மகாத்மா சிறந்த தலைவர் என அறிவிக்கப் பட்டார். மிதவாதம், தீவிரவாதம் என இருபிரிவுகளாக எதிர்த்து நின்ற போதும் பிடிவாதம் கொண்ட ஆங்கிலேயர்கள் நம்மை விட்டு அகல மறுத்தார்கள். ஓவ் வொரு குழுவாக அங்கங்கே போராட்டங்கள் வெடித்த போதும், பெரிய அளவிலான கூட்டு முயற்சி தொடர்ச்சியாகத் தேவைப்பட்டது. மீகாமன் இல்லா மரக்கலம் போல இடருற்ற இந்திய தேசத்தை பிதாமகன் போல முன்னின்று காக்க சபதம் கொண்டார். அரிச்சந்திரனின் புராணத்தால் ஆட்கொள்ளப்பட்டு சத்தியத்தைக் கைக்கொண்டார்.

அயல் நாட்டிற்கு சென்று சட்டம் படித்த போதும் நம் நாட்டிற்காக திட்டம் தீட்டி செயலாற்றியவர், தென் ஆப்பிரிக்காவின் நிறவெறியை நிர்மூலமாக்க தன்(ந்)திற நெறி கண்டவர். உப்பு பொறாத விசயம் தானே என ஊரார் நினைத்திருந்த போது உப்பு உரிமையை விசம் போல் ஆங்கிலேயருக்கு ஆக்கியவர். நம் நாட்டின் பருத்தியை உறிஞ்சிக் கொண்டு தொழிற்புரட்சி என பிரகடனம் செய்த வெள்ளையர்களுக்கு தொல்லைகள் அளித்தவர். மானத்தைக் காக்க மாற்றான் துணி எதற்கு என கை இராட்டையை சுழற்றத் துவங்கியவர்.

வெள்ளையஏகாதிபத்தியத்திற்கேபத்தியம் சொல்லி வைத்தியம் செய்தவர். பிரித்தாளும் சூழ்ச்சியை வீழ்ச்சியுற செய்த வெற்றி நாயகர். ஆயுதம் கொண்ட ஆங்கிலேயரின் கண்களில் அகிம்சை கொண்டு கண்ணீர் வரச் செய்தார். வின்ஸ்டண் சர்ச்சில் சொல்லும் போது “காந்தி ஒரு துப்பாக்கிப் படையுடனோ அல்லது பீரங்கிப் படை யுடனோ எனை நோக்கி வந்தால் ஒரு நொடிக்குள் அவரை வென்று

# இயலாமையின் ஒளி

இதோ
இந்த பொழுதுதான்
உன்னை அழைத்து
இசை மீட்ட சொன்னது....

நான் பாத்துக்கொண்டே
இருக்கும் சமயத்தில்தான்
நமக்கான இருளும்
இசைந்து வந்தது....

வழியெங்கும் விழிபதித்து
உன் வருகைக்காய்
என்னுடனே காத்திருந்தது
இருளும் கைகோர்த்தபடியே...

விழிமீன்கள் நீர்வற்றி
கருவாடாய் போனபின்பு
உன்வருகை அவ்விரவின்
சாயலின் தோழனானது...

இருளுக்கான அப்பொழுது
எனைநோக்கி ஒளிவீச
இயலாமையின் கரங்களை
இறுக்கமாய் பிடித்துக்கொண்டேன்.....

மூவருமே பேச்சற்று
ஏமாற்றத்தை ஆடையாக்கி
விழிநோக்க நாணப்பட்டு
தரைமீது ஒளிபதித்தோம்.....

இருளும் இயலாமையும்
மனிதத்தை சுமந்ததினால்
தனிமையிலே யெனைவிட்டு
தயக்கத்துடன் நகர்ந்தது....

யாருமற்ற இப்போது
உனக்கான தேநீரின்
ஆவியோடு அளாவுகிறேன்
என் மரணத்தை வெல்வாயா???!!!

**ஜீவா**
கோயம்புத்தூர்

வீழ்த்துவேன். ஆனால் அகிம்சை எனும் ஆயுதம் ஏந்தி அன்பு தோய்ந்த முகத்தோடு ஒவ்வொரு முறை என்னை எதிர்க்கும் போதும் நான் தோற்றுப் போகிறேன்" என்பார். நாட்டிற்காக முன்பு உடல் திறந்தார் பின்பு உயிரும் துறந்தார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" - குறள் 314

என்ற குறளுக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர். சுதந்திரத் தீரத்தில் விதந் தரும் பல போராட்டங்கள் நாடெங்கிலும் நடைபெற்றது. ஒரு சமயம் காந்தி சிறையில் அடைக்கப் பட்டிருந்த போது அந்த சிறைக் காப்பாளர் காந்தி என்றும் பாராமல் ஒவ்வொரு முறையும் அவரை தனது விறைத்து நின்ற பூட்ஸ் காலால் உதைத்துத் தள்ளுவாராம். விடுதலையான பின்பு காந்தி ஆங்கிலேயரைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்துவதற்காக இங்கிலாந்து சென்றிருந்த போது, பணி ஓய்வு பெற்ற அந்த உதை கொடுத்த காவலரைச் சந்தித்தார். தான் கொண்டு சென்றிருந்த அந்தப் பரிசுப் பொட்டலத்தை சமர்ப்பித்து வணக்கம் செலுத்தித் திரும்பினார். பொட்டலத்தை பிரித்துப் பார்த்த அந்த காவல் அதிகாரி அதற்குள் "ஒரு ஜோடி பூட்ஸ்" இருப்பதைக் கண்டு பல நாட்கள் கண்ணீர் வடித்தார்.

"ஈசுவர அல்லா தேரே நாம்" என்று மத நல்லிணக்கத்தைப் போதித்தார். காந்தியம் என்று பிற்காலத்தில் பேசுமொரு நெறி கண்டார். ஊடகங்கள் பெரிதான வளர்ச்சி அடையாத காலத்திலும் பட்டி தொட்டி எங்கும் பாமர மக்களாலும் பேசப்பட்டார். சுதேசி ஆடைகளை சுய உழைப்பால் நெய்து அணிய அணி செய்தார். செயலற்று இருப்போர்களைக் கண்டு அந்நாளில் "செய் அல்லது செத்து மடி" என்ற கோசம் சூறாவளியாய் பரவியது. காந்தி சொன்னார் "எனக்கு மட்டும் ஒரு நாள் இந்நாட்டின் சர்வாதிகாரியாகும் வாய்ப்பு கிடைக்குமேயானால் அத்தனை அன்ன சத்திரங்களையும் மூடி விடுவேன்" என்று.

ஏனெனில் தர்மத்தை தடுப்பதற்காக அல்ல, உழைக்காமல் ஊதாரியாய் சுற்றித் திரிந்து, உண்டு உடல் வளர்ப்போர் உருப்பட வேண்டும் என்பதற்காக.

இவரைப் பின்பற்றி அமெரிக்காவில் மார்ட்டின் லூதர் கிங்கும் நிற வெறிக்கு எதிராக போராடி வெற்றி பெற்றார். துப்பாகிக்குத் தூவும் மழை போல தூய தியாகம் கொண்ட நம் தேசப் பிதாவிற்கு துப்பாக்கி குண்டுகளை சில துப்புக் கெட்டவர்கள் பரிசளித்தனர். மகாத்மாவிற்காக நாம் செய்தது என்ன? ரூபாய் நோட்டுகளில் சத்தியத்தின் உருவான அவர் படத்தை அச்சிட்டோம். ஆனாலும் சிலர் எச்சில் லஞ்ச காசிற்காக ஏங்கி நிற்கின்றனர். காந்தி சாலையென பெயர் வைத்தோம். ஆனால் அங்கிருக்கும் மதுக்கடைகளை மட்டும் மனசார மறந்து விட்டோம். அவருக்கு வீதி நடுவினில் சிலை வைத்து அழகு பார்த்தோம். அதனால்தான் என்னவோ பல பேர் அவரிடமிருந்து ஒதுங்கியே செல்கின்றனர். அவர் பெயரில் பூங்கா வைத்தோம் ஆனால் அதில் பல பேரை தூங்க வைக்கிறோம். தீவிரவாதமும், சாதிய பேதமும், வன்முறை நாதமும் வலுப்பெறுகின்ற தற்காலத்தில் அன்பெனும் மொழியும் அகிம்சை எனும் விழியும் பெற்ற இளைஞர்கள் அதிகம் தேவைப்படுகிறார்கள். நம்மிடம் செயல்திறம் மிக்க பொறியாளர்கள் பல லட்சங்களில் நிறைந்திருக்கலாம். அநியாயத்தை துறந்து ஜனநியாயத்தை காக்க பல நெறியாளர்கள் லட்சியங்களில் தேடப்படுகிறார்கள். நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் ஊறு விளைவிக்காத உள்ளங்கள் இந்தியாவின் ஒவ்வொரு இல்லங்களிலும் வேண்டும். அப்பொழுதுதான் காந்தி காண விழைந்த கனவு தேசம் கைவசப்படும். பூந்தியை மொய்க்கும் ஈக்கள் போல சில பிரச்சனைகள் இந்தியாவை சுவை பார்க்க விரும்புகிறது. அதற்கு இடம் தராமல், இடர் வராமல், படர்ந்து வர நினைக்கும் பகையை தொடர்ந்து சென்று எதிர்க்கும் துணிவு கொண்ட தேசம் எங்கள் தேசமென தோள் கொட்டும் இளைஞர் கூட்டம் செறிந்து நிற்கும் பாரதமாய் பொலிவு பெறட்டும். காந்தி பிறந்த நன்னாளில் மதுக்கடைகளின் கதவுகளை சாத்தினோம், மனக் கதவுகளை மகிழ்வுடனே திறப்போம். சூழ்ச்சிகளுக்கும் வஞ்சத்திற்கும் விடுமுறையளிப்போம். சுடர்விடும் நெஞ்சத்திற்கு வேலை அளிப்போம். வீழ்ச்சிதனை விவேகத்தால் காத்து நிற்போம். பாரதியின் வரிகள் கொண்டு காந்தியைப் போற்றுவோம். புகழ் மாலை சாற்றுவோம்.

"அடிமை வாழ்வு - அகன்று இந்நாட்டார் விடுதலை ஆர்ந்து செல்வம்,
குடிமையில் உயர்வு, கல்வி, ஞானமும் கூடி ஓங்கிப்
படிமிசைத் தலைமை எய்தும்படிக்கு ஒரு சூழ்ச்சி செய்தாய்!
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்! புவிக்குள்ளே முதன்மை உற்றாய்!"

## முருகன் புகழ்

சந்தனத் தென்றலும் வந்தனம் தந்திடும்
கந்தனும் வள்ளியும் தானே - அருள்
கொண்டவன் செம்மொழிக் கோவே !

புத்தியும் சித்தியும் முத்தெனத் தந்தவன்
நித்தமும் வென்றிடத் தானே - அவன்
நிச்சயம் எந்தனின் வேரே !

**- கு. கமலசரஸ்வதி**

**நேர்காணல்:**

'குழந்தை இலக்கிய ரத்னா' **கன்னிக்கோவில் இராஜா**

**■ தமிழ்நெஞ்சம் அமின்**

**தமிழ் இலக்கிய உலகில் ஹைக்கூ, லிமரைக்கூ, சென்ரியு, லிமர்புன், புதுக்கவிதை, நவீனக்கவிதை, குழந்தைப் பாடல்கள், சிறுவர்க்கான கதைகள், நாடகங்கள் போன்றவற்றால் வெகுவாக அறியப்பட்டவர் சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த கவிஞர் கன்னிகோவில் இராஜா அவர்கள். சுமார் இருபத்தைந்து ஆண்டுகாலம் தன்னை இலக்கியத்தோடு இணைத்துக் கொண்டு செயலாற்றி வருபவர். அவரின் நேர்க்காணல் இதோ....**



# குழந்தைகள் உலகின் கதைச்சொல்லி கன்னிக்கோவில் இராஜா

"தாத்தா... தாத்தா... மணி என்ன?"

"ஒன்று"

"தாத்தா... தாத்தா... மணி என்ன?"

"இரண்டு"

எனக் குழுவாக ஆடிக் கொண்டிருக்கும் பிள்ளைகள் "பத்து" என சொல்லி முடித்ததும்

"தாத்தா... தாத்தா... என்ன தேடறீங்க?"

"ஊசி".

"ஊசி எதுக்கு?"

"பை தைக்க"

"பை எதுக்கு?"

"பணம் போட"

"பணம் எதுக்கு?"

"கத்தி வாங்க"

"கத்தி எதுக்கு?"

"தீயதை வெட்ட"

எனக் கையை ஓங்கியவாறு துரத்தி வரும் நாடகத்தில் தாத்தா வேடம் போட்டு குழந்தைகளுக்கு கதைச் சொல்லிக் கொண்டிருந்த எழுத்தாளர் கன்னிக்கோவில் இராஜாவை நம் 'தமிழ்நெஞ்சம்' இதழுக்காக நேர்க்காணல் கண்டோம்...

புதிய தலைமுறையினருக்கு இன்றைய தேவை... இலக்கிய வகைகளில் ஒன்றான சிறுவர் இலக்கியமே. சிறிய வயதில் பதியும் எந்த ஒரு நற்செய்தியும் அவர்கள் வளர வளர நல்வழிப்படுத்தும். இதற்காகத்தான் அன்றைய காலத்தில் போதனை வகுப்புகள் நடத்தப்பட்டன. இன்றைய சிறுவர்களும், இளைஞர்களும் நல்வழிப் பாதைக்கு செல்ல சிறுவர் இலக்கியமே முதன்மையான ஒன்றாகும்.

கவிஞர், இதழாசிரியர், கதைச் சொல்லி என பன்முக நோக்கில் வலம் வரும் கன்னிக் கோவில் இராஜா, உலகப் பொதுமறை தந்த ஐயன் திருவள்ளுவர் அவதரித்த திரு மயிலாப்பூரில் 11.12.1975ல் பிறந்தவர்.

இவர் பாரதியார் பிறந்த நாளிலும், இவரது மகன் விஸ்வராஜா (ஆகஸ்ட் 21) ஜீவா பிறந்த நாளிலும், மகள் பவயாழினி (ஏப்ரல் 29) பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாளிலும் பிறந்ததை பெருமையாகக் கருதுகிறார்.

ஆரம்பத்தில் முனைவர் ஆசுரா, கவிஞர் சு. கணேஷ்குமார் ஆகியோர் நடத்திவந்த 'புதிய செம்பருத்தி' இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயலாற்றினார். பின்பு கவிஞர் வசீகரன் நடத்தி வருகிற 'பொதிகை மின்னல்' இதழில் இணையாசிரியராகப் பணியாற்றி உள்ளார். இணையத்தில் துளிப்பா நாளிதழ் மற்றும் சிறுவர்களுக்காக அரும்பின் புன்னகை இதழ்களை நடத்தியவர், தற்போது மின்மினி ஹைக்கூ இதழை அரையாண்டு இதழாக நடத்தி வருகிறார். இதுமட்டுமின்றி வடிவமைப்பு பணியிலும் ஈடுபட்டு வருகிறார்.

"சிறுவர் இலக்கியம் படைக்கும் போது, என்னையே நான் மறக்கிறேன். அப்படைப்புகளைப் படைத்தபிறகு என் குழந்தைகளுக்கு வாசித்துக்காட்டி, அதிலுள்ள குறைகளை சரிசெய்ய முனைகிறேன். பிறகே வெளியிடுகிறேன்." எனக்கூறும் இவர் இதுவரை 27 நூல்களை எழுதியுள்ளார். 20 நூல்களைத் தொகுத்து உள்ளார். அதில் பெரும்பாண்மையானவை சிறுவர் இலக்கியம் சார்ந்ததே.

நாள்தோறும் படிக்கிற இதழ்களில் எழுதும் எண்ணற்ற படைப்பாளிகளிடமிருந்து அதிகம் கற்றுக் கொள்கிறேன். இந்த பயணத்தின் ஆரம்பத்தில் என்னை ஒரே சொல்லால் ஊக்குவித்த ஒற்றை மந்திரம் உவமைக் கவிஞர் சுரதா தொடங்கி, ஹைக்கூ தளத்தில் பல புரிய பரிமாணங்களை அடையாளம் காட்டிய செல்லம்மாள் கண்ணன், உதயக்கண்ணன், தோழமையோடு தோள்மீது கை போட்டுக் கொள்ள அனுமதியளித்த பாவலர் புதுவைத் தமிழ்நெஞ்சன், சிறுவர் இலக்கியப் பாதைக்கு துணைவரும் குழந்தைக் கவிஞர் பணிச்செல்வர் திரு. பி. வெங்கட்ராமன், எனது வடிவமைப்பை மெச்சி, 'உச்சு' கொட்டும் இலக்கியச்சாரலின் நிறுவனர் கவிமாமணி இளையவன், ஆரம்பத்தி லிருந்து இன்று வரை ஊக்கமளித்து வரும் கவிச்சுரபி சுப. சந்திரசேகரன், படைப்பாளிகள் ஒவ்வொருவரிடமும் என் கலையைப் பரிந்துரைச் செய்யும் 'கவிநயச்செல்வர்' மன்னை பாசந்தி, என் பெயர் எங்கிருந்தாலும் உடனே தொலைப்பேசியில் தெரிவித்து மகிழும் மதுரைக் கவிஞர் இரா. இரவி,

ஐந்து வருட இதழ்ப்பணியில் அதிக அனுபவங்களைத் தந்த கவிஞர் வசீகரன், எப்போதும் நேசக்கரம் நீட்டும் கவிஞர் கார்முகிலோன் மற்றும் பலரை அறிமுகப்படுத்திய நீரை அத்திப்பூ, குழந்தைகளுக்கு திருக்குறள் அமுது படைக்கும் கவிஞர் செம்போடை வெ.குணசேகரன் என இன்னும் மனதினில்



"சிறுவர் இலக்கியம் படைக்கும் போது, என்னையே நான் மறக்கிறேன். அப்படைப்புகளைப் படைத்தபிறகு என் குழந்தைகளுக்கு வாசித்துக்காட்டி, அதிலுள்ள குறைகளை சரிசெய்ய முனைகிறேன். பிறகே வெளியிடுகிறேன்."



பெயர் பதிக்கும் தோழமைகள்... என அனைவரையும் நன்றி பாராட்டுகிறார்.

இன்றளவும் தன் சிறுவர் இலக்கியத்திற்கு பக்கபலமாய் இருக்கும் திரு.பி.வெங்கட்ராமன் மற்றும் புதுவைத் தமிழ்நெஞ்சன் ஆகியோரை தன் கண்காகவே உணர்கிறார்.

- **உங்கள் இலக்கிய அனுபவங்கள் பற்றி...**

ஹைக்கூவின் மேல் அதிகபற்று கொண்ட காரணத்தினால் கவிஞர் ஆசுரா அவர்களை ஆசிரியராகயும், கவிஞர் சு. கணேஷ்குமாரை துணை ஆசிரியராகவும் கொண்ட 'புதிய செம்பருத்தி' இதழில் ஆசிரியர் குழுவில் நானும் இடம் பெற்றேன். சுமார் 4 ஆண்டுகள் அவ்விதழில் மனமுவந்து பணியாற்றினேன்.

அறிவியல் அற்புதத்தில் கைப்பேசி எனப்படும் செல்பேசியின் பயன் அதிகரிக்கத் தொடங்கிய அக்கால கட்டத்தில் கைப்பேசியில் ஹைக்கூ கவிதைகளை குறுஞ்செய்தி (SMS) மூலம் அனுப்புவதை வழக்கமாகக் கொண்டேன். குறுஞ்செய்தியில் முதல் ஹைக்கூ இதழை நடத்திய பெருமை இவரையேச் சாரும் என பல இதழ்கள் குறிப்பிட்டன. இது குறித்த ஆய்வு செய்த மாணவர் தனது ஆய்வேட்டில் பதிவு செய்திருக்கிறார்கள். இன்று சுமார் 40 குறுஞ்செய்தி இதழ்கள் வருவதற்கு முதல் ஓட்டத்தை ஏற்படுத்தியது. இதனை குங்குமம், கல்கி, தினமலர் உள்பட 36 இதழ்கள் பதிவு செய்தன. 'கல்கி' இதழ் ஒரு படி மேலே சென்று இரண்டு பக்கங்களுக்கு நேர்க்காணலை பதிவு செய்து உலகிற்கு பறைசாற்றின.


எனது துளிப்பா சேவையைப் பாராட்டி கோவை வசந்த வாசல் கவிமன்றம் 'துளிப்பா பரிதி' என்கிற விருதை அறிவித்து கௌரவப் படுத்தியது. 1000 நாட்களாக கைப்பேசியில் அனுப்பிய கவிதைகளைத் தொகுத்து 'SMS ஹைக்கூ கவிதைகள்' மற்றும் 1500 நாட்கள் கொண்டாட்டத்தை 'கன்னிக்கோவில் இராஜாவின் 1500 வது நாள் மலர்' ஆகிய இரண்டு நூல்களையும் கவிஞர் வசீகரன் தனது மின்னல் பதிப்பகம் மூலம் கொண்டுவந்து சிறப்பு செய்தார்.

இந்த குறுஞ்செய்தி சேவை தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு மீள்பதிவாகி இருப்பது தமிழுக்கும் தனக்கும் கிடைத்த பெருமை. [இது இன்றைய புலனத்திற்கு (வாட்ஸ்அப்) முன்னோடி]

முனைவர் ஆசுரா - வேளச்சேரி சு. கணேஷ்குமார் ஆகியோர் நடத்தி வந்த 'புதிய செம்பருத்தி' சிற்றிதழில் ஆசிரியர்குழுவில் இணைந்து இலக்கியச் சேவை புரிந்த நான், கவிஞர் கவிஞர் வசீகரன் அவர்களை
















ஆசிரியராகக் கொண்டு வந்துகொண்டிருக்கும் 'பொதிகை மின்னல்' மாத இதழில் 2005 முதல் 2012 வரை இணையாசிரியராகவும் செயல்பட்டுள்ளேன். அக்காலகட்டத்தில் மின்னல் கலைக்கூடத்தில் இருந்து 'குட்டி' என்கிற சிறுவர் இதழை இருமாதத்திற்கு ஒருமுறை கொண்டு வந்ததில் பெரும் பங்கு வகித்துள்ளேன். அதன்பிறகு 'மின்மினி ஹைக்கூ இதழுக்கு ஆசிரியராகினேன்.

- **நூல்களின் விபரம்**

என் இலக்கிய ஆர்வத்தில் கவிதைகளைத் தான் முதலில் தேர்ந்தெடுத்தேன். ஹைக்கூவின் மீது ஆதித ஈடுபாடு கொண்டதால் ஹைக்கூ விசிறி, ஹைக்கூ சாவிக்கொத்து, தேநீர் கோப்பையில் ஹைக்கூ இப்படி பல புதிய முயற்சிகளை மேற்கொண்டேன். ஹைக்கூவில் ஏழு நூல் வந்த பிறகே சிறுவர் இலக்கியத்தில் ஈடுபட்டேன். ஹைக்கூ, லிமரைக்கூ என வகைப்படுத்திக் கொண்ட பிறகு 'லிமர்புன்' என்ற வடிவத்தினை தமிழுக்கு அறிமுகம் செய்தேன். அவ்வடிவம் இன்றளவும் முகநூலில் பலராலும் எழுதப்பட்டு வருகிறது. இதுவரை நவீனக்கவிதை 2, ஹைக்கூ - லிமரைக்கூ 5, சிறுவர் பாடல்கள் 5, சிறுவர் கதை நூல்கள் 16, கட்டுரை நூல் 1, சிறுவர் நாடக நூல் 1 எழுதியுள்ளேன். தொடர்ச்சியாக வெகுஜன இதழ்களில் சிறுவர் கதைகள் எழுதி வருகிறேன்.

- **குழந்தைகளுக்கான இலக்கியத்தை நீங்கள் தேர்ந்தெடுக்க காரணம்?**

என் குழந்தைகளுக்காக எழுதத் தொடங்கிய என்னை, எனக்கே பிடிக்க வைத்தவை சிறுவர் பாடல்களே. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, அழ. வள்ளியப்பா, பெரியசாமி தூரன் ஆகியோரின் பாடல்கள் என்னை இவ்விலக்கியத்தின் உள்ளே நுழைய வழி செய்தன. தொடர்ந்து சிறுவர்பாடல்களாகவே எழுதி வந்தேன். என் குழந்தைகள் வளரும் பருவத்தில் நாள்தோறும் கதைகளைக் கேட்கத் தொடங்கவே, அவர்களுக்காக எழுத ஆரம்பித்து இன்றுவரை பல்வேறு குழந்தைகளுக்காகவும் எழுதி வருகிறேன். இதுவரை என்னைப் பற்றி வெளிவந்த செய்திகளையும், நேர்க்காணலையும் தனித்த நூலாக தொகுத்துவருகிறார் புதுவை முனைவர் இர. பிரபா அவர்கள். அவை என் பிறந்தநாளில் வெளிவருகின்றன.

- **குழந்தைகள் குறித்த உங்கள் இலக்கிய அனுபவம் எப்படிப்பட்டது அதிலிருந்து எதை நோக்கிப் பயணிக்கிறீர்கள்**

நாம் பார்க்கும் கண்ணாடியைப் போன்றது குழந்தை இலக்கியம். அதில் எதைப் பார்க்கிறோமே அதையே அது பிரிதிபலிக்கும். நமக்கு தெரியாத பல புதிய செய்திகளைத் தெரிந்து கொள்ளும் அனுபவத்தை ஏற்படுத்தும். ஏதோவொன்றை சொல்லி சமாளித்துவிட இயலாத இவ்விலக்கியத்தில் நாம் நேர்மறை எண்ணங்களை நோக்கி நகர வழிவகுக்கும். புதிய தலைமுறை நம் கையில் உள்ளது. அதற்கு நம்மால் என்ன செய்ய இயலும் என்பதை நோக்கியே என் ஓட்டம் இருக்கிறது.

- **குழந்தை இலக்கியம் குழந்தைகளிடம் சென்றடையும் சூழல் உருவாக்கப் பட்டிருக்கிறதா?**

தற்காலச் சூழலில் கணவன் மனைவி இருவருமே பணிக்கு செல்லும் நிலைதான் இங்கிருக்கிறது. யாரோ பார்த்துக் கொள்கிறார்கள் என யாரை நம்பியே ஒப்படைத்தும் செல்லும் குழந்தைகளுக்கு புத்தகம் என்பது எட்டாக்கனி. ஒரு சில சிறந்த ஆசிரியர்களால் பாடல்கள் வழியும், கதைகள் வழியும் நல்லொழுக்கம் புகுத்தப்படுவதையும் மறுப்பதற்கில்லை.

ஆங்கில சிறார் நூல்களில் இருப்பதைப்

போல தமிழ்நூல்கள் வயது வாரியாக பிரிக்கப்படுவதில்லை. எல்லாமே குழந்தை இலக்கியம் அல்லது சிறுவர் இலக்கியம் என்கிற பிரிவிலேயே வந்துவிடுகின்றன. தன்னார்வலர்களால் சிறுவர் கரங்களில் கல்வியைத் தாண்டி இப்புத்தகங்கள் சென்றடைகின்றன. அதன்வழி அவர்கள் புதிய உலகை கண்டு வியக்கிறார்கள். குழந்தைகளிடம் சென்றடைவதற்கான சூழல் இன்னும் சரியாக அமையவில்லை. அதற்கு பள்ளிக் கல்வித்துறையும், பெற்றோர்களும் முன் வரவேண்டும். அப்போதுதான் சரியான பாதை அமையும்.

- **நீங்கள் நிறைய விருதுகளைப் பெற்றிருக்கிறீர்கள் அதைப் பற்றி, அதிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டதைப் பற்றி...**

உங்களின் வினா சரியாக இருப்பதற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது "விருதுகளை 'வாங்கி' இருக்கிறீர்களா" என்று கேட்டிருந்தால் கொஞ்சம் நெளிந்திருப்பேன். விருதுகளைப் பெற்றிருக்கிறீர்கள் என்று கேட்டது மனமகிழ்ச்சியாக இருக்கிறது. காலத்தின் சூழலில் இப்போதெல்லாம் விருதுகளை 'வாங்கிக்' கொண்டிருக்கிறார்கள்.

விருதுகள் என்பது நாம் செய்யும் செயல் பலருக்கு உந்துசக்தியாக இருக்கிறது என்பதை அடையாளம் கண்டு வழங்கப்படுவது. அதன்மூலம் வழங்கியவரும், பெற்றவரும் மகிழ்கிறார்கள். பெற்றவர் இன்னும் நமக்கான பொறுப்பு அதிகமாக இருப்பதாக எண்ணி தன் படைப்புகளை, உழைப்பை, செயலை






மெருகேற்ற வேண்டும். அதற்காகத்தான் விருதுகள் வழங்கப்படுகின்றன என நான் எண்ணுகிறேன்.

எனக்கு பல அமைப்புகள் விருதுகள் வழங்கி உள்ளன. அதிலும் சிறார் இலக்கியத்திற்காக பல விருதுகளைப் பெற்றுள்ளேன். 'பரிந்துரையோடு அனுப்புங்கள்' என்கிற படிவத்தோடு வருகிற விருதுகளை புறந்தள்ளுகிறேன். என்னை கலந்தாலோசிக்காமல், என் படைப்பின் பொருள் உணர்ந்து பல நண்பர்கள் பரிந்துரைக்கிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் அவர்கள் யாரும் இதுவரை முன்வந்து கூறியதில்லை. விருதுகள் வழங்கப்படுவது தவறில்லை. ஆனால் அதனுடன் சிறு தொகை இணைத்து வழங்குவதன் மூலம் படைப்பாளனும் அவர் குடும்பமும் பெருமகிழ்ச்சி அடைவார்கள் என்பது என் கருத்து. ஒரு படைப்பாளனுக்கு கைத்தட்டல் எவ்வளவு முக்கியமோ அதைப் போன்றதுதான் விருது. அது சரியான நபரால், சரியானவருக்கு வழங்கப்பட வேண்டும்.

- **ஹைக்கூவில் புதிய முயற்சிகளைப் போல சிறார் இலக்கியத்தில் ஏதேனும் செய்துள்ளீரா?**

குழந்தை இலக்கியம் என்பது கற்பனை, கருத்துரை அல்லது அறிவுரை மட்டுமே எழுதினால் அது சோர்வடையச் செய்துவிடும். தற்கால கருத்துகளைக் கொண்ட படைப்புகளையே குழந்தைகள் விரும்புகிறார்கள். உதாரணமாக... "அழகு அணில்" எனத் தலைப்பிட்டு கதை எழுதினால் ஓரிரு குழந்தைகளே படிப்பார்கள். அதே தலைப்பை "நூடுல்ஸ் கேட்ட அணில்"

என இக்கால குழந்தைகளுக்கு புரியும் வண்ணம் எழுதினால்... "என்ன அணில்கூட நூடுல்ஸ் கேட்கிறதா" என வியந்து விரும்பி படிக்க ஆரம்பித்துவிடுவார்கள். அப்போது நாம் என்ன கருத்தை சொல்ல வருகிறோமோ அதை எளிதாகச் சொல்லிவிடலாம்.

- **நூல்களுக்கான பரிசுகளைப் பற்றி...**

எனது 'தங்கமீன்கள் சொன்ன கதைகள்' கலைஞன் பதிப்பகமும், மலேயா பல்கலைக் கழகமும் இணைந்து நடத்திய நூலாக்கப் போட்டியில் வெற்றி பெற்று மலேசியாவில் வெளியிடப்பட்டது. அதே போன்று எழுத்து அமைப்பு நடத்திய போட்டியில் என் கதைகள் முதல் பரிசு பெற்று அவை 'பூமிக்கு இறங்கிவந்த குட்டிமேகம்' என்ற நூலாக பதிப்பிக்கப்பெற்று கவியரசு வைரமுத்து, நீதியரசர் வெ. இராமசுப்பிரமணியன் ஆகியோரால் வெளியிடப்பட்டது.

- **எதிர்கால திட்டம்...**

இன்றைய மாணவர்களுக்கு வாசிக்கும் பழக்கம் என்பது அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருக்கிறது. இன்றைக்கு தேவையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு, அறிவியல் ஆற்றல் ஆகியவற்றை சிறு சிறு கதைகளின் மூலம் அவர்களுக்க எளிதில் புகட்டுவதற்கும், கல்வியோடு பொதுஅறிவை வளர்ப்பதற்கும் பல புதிய யுக்திகளைக் கையாள வேண்டும். கைப்பேசி விளையாட்டு, தொலைக்காட்சி தொடர்கள் ஆகிய பெரும் சவால்களுக்கு இடையில் நூல்கள் வாசிக்கம் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.





- **மகிழ்ச்சி. தமிழ்நெஞ்சம் இதழ்பற்றி...**

பல்வேறு நாடுகளில் இருக்கும் தமிழ்ப் படைப்பாளிகளை ஒன்றுசேர்க்கும் முயற்சிக்கு முதலில் பாராட்டுகள். தன் படைப்புகளின் வழியே பல புதிய மாற்றத்தினை காண துடிக்கும் புதிய, அனுபவ எழுத்தாளர்களுடன் பயணிக்கும் தமிழ்நெஞ்சம் இதழ் ஒரு தேன்கூடு. பலவிதமான படைப்புகளை சேகரித்து அதனை வாசகனுக்கு அளிக்கும் மாபெரும் பணியைச் செய்வது போற்றுதலுக்குரியது. புதிய படைப்பாளிகளின் பயிற்சிகளமாக இருக்கும் இவ்விதழில் எனது நேர்க்காணல் வருவதை பெருமையாக எண்ணுகிறேன். இதற்கு உறுதுணையாக இருந்த புதுச்சேரி முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரிக்கும், பிரான்சில் இருந்தாலும் தமிழ்உணர்வோடும், தமிழர்களின் நலனோடும் அக்கறை கொண்ட உங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.



# உயிரூற்றிக்கொடு!

தழுவலின் வியாபகத்தில்
கரையா தேகங்கள்
அறியாப்படா ரகசியங்கள்!

உன்னுடனான பொழுதுகள்
தூறலாகவும் பின்பு
சாரலாகவும் மாறிப்போவதில்
வியப்பேதும் இல்லை தான்!

கடக்கவே முடியா இத்தருணத்தை
முத்தத்தால் பற்றவை
எரிந்து போகட்டும் தேக காடு!

மிதந்தலையும் இறகு
பனித்தூவலில்
கொண்டு சேர்த்திருக்கக் கூடும்
முன்னறியா ராகங்களை!

அனுமதியின்றி மழையின்
கனவைப் பற்றவை.
சிலிர்ப்பை கண்டுணரட்டும்
கடுங்கோடை!

ஒரு பிடி தயக்கம் ஒரு பிடி மயக்கம்
நேசத்தின் வியாபகத்தை
நிலை நிறுத்தி விடுகிறது!

அதிசய தாக்கம் உணர்வின்
ஏக்கத்தை நிறைக்கிறது.
உயிரூற்றிக் கொடு
பிழைத்துபோகிறேன்!

**ஆனந்தி ராமகிருஷ்ணன்.**
வடலூர்.

# காதல்

நிஜமாகவே
நிகழ்காலத்தில்
நிரந்தரமாக
நிம்மதியாக
நிழல் போல்
நின்னிடத்தில்
நிலைத்து வாழ ஆசைப்பட்டேன்
நின் பெற்றோர்கள்
நிலை தடுமாற்றம்
நிலைகுலைய வைத்தது
நிம்மதியில்லாது
நித்திரையை
நிரந்தரமாக்கினோம்

**வி.எஸ்.ரோமா**
கோயம்புத்தூர்

# மசங்கும் மாலை

*அறுசீர் விருத்தம்*
*மா மா காய்*

வண்டு மொய்க்கும் பூஞ்சோலை
வாசம் வீசும் மாம்பூவே

செண்டுப் பூக்கள் உச்சியில்தான்
சேர்ந்து ஆடும் அழகாக

தண்டு குலுங்கும் மலர்க்கொத்தை
தள்ளி அலைக்கும் பூங்காற்றே

மண்டு புதரில் கிளிக்கூட்டம்
மசங்கும் மாலைப் பொழுதினிலே

**தென்றல் கவி**
பட்டுக்கோட்டை

## மீமொழி

நிலவை மறைத்து விட நினைக்கும்
முகிலைத் தாண்டி வெளியேற
எத்தனை முறை போராடி யிருக்கும் நிலவு
இடர்களைக் கண்டு தயங்கவில்லை நிலவு
மௌனமாக நகர்ந்து செல்லும்
முகில்களோ பெருமை கொள்கிறது வென்று விட்டோமென
எழுதிய தாள்களை அழித்து வெற்றுத் தாளாக்கி
இன்பம் காண நினைக்கிறது முகில்
இடர்களைக் கடந்து மௌனித்துப் பயணிக்கிறது நிலா

வாழ்விலும் உயர்வைக் காணச் சகிக்காத உள்ளங்கள்
வெற்றுத் தாளாக்குவதில் இன்பம் காண முயல்கிறது
ஒருவரின் உயர்வில் மகிழ்வு கொள்ளாத உள்ளங்கள்
குறைகளைக் கூறிக்கூறி அழித்துவிட நினைக்கும்
நிலவைப்போல இடர்களைத் தாண்டி வெளியே வா
வானில் ஒளிர்ந்து பிரகாசிப்பாய் என்றுமே...

**நிர்மலா சிவராசசிங்கம்**

# தன்முனைக் கவிதைகள்



**இராம வேல்முருகன்**
வலங்கைமான்

●
கண்களை வைத்தே
கடும்போர் ஒன்று.
வென்ற போதிலும்
தோல்வியே வெற்றி

●
வெற்றியைத் தேடி
விரைந்திடும் கூட்டம்
தோல்வியைக் கண்டால்
விலகியா ஓடும்?

●
ஓடும் குதிரையே
பந்தயத்தில் ஜெயிக்கும்
சும்மா இருப்பதோ
சுவற்றோரம் மரிக்கும்!

●
மரிக்கும் உடலையா
மதிப்பர் யாவரும்?
உயிர்போன பின்னர்
உடலைத் தொடுவரோ?

●
தொட்டு உணர்வதும்
தொடர்ந்து தொடுவதும்
பட்டு மேனியில்
பளபளப்பு வரையில்தான்

●
தானெனும் அகந்தை
தன்னையே அழிக்கும்
நாமெனும் உணர்வையே
நானிலம் மதிக்கும்

●
மதிக்கும் மனிதனை
மதித்துநீ போற்றிடு
விதிக்கும் மாற்றுள
வெற்றியை ஈட்டிடு

●
ஈட்டும் பொருள்தனில்
ஈகையைச் சேர்த்திடு
வாட்டும் வறுமையை
விரட்டிட உதவிடு

●
உதவும் உள்ளமே
உயர்வைப் பெற்றிடும்
இதம்நிறை பேச்சே
என்றும் வெல்லுமே

●
வெல்லும் வழிகளில்
வேதனை ஓடும்
சொல்லும் கவிகளில்
சொக்கிடும் கண்கள்

# சொன்னைள

## முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி

புதுச்சேரி.

கடல் அவள் முந்தானையைப் பிடித்து இழுத்தது. கொஞ்சம் சிணுங்கலுடன் சேலையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு கரைவந்தாள்.கடல்மணலில்உக்காந்திருந்த கட்டுமரத்தில் அவள் உக்காந்தாள்.

திரும்ப கடலை வெறித்தாள். இந்தக் கடல்தானேதன்வாழ்வைப்புரட்டிப்போட்டது. நிலைகுலையச்செய்தது.என்றாலும்அவளுக்கு ஏனோ அதன்மீது கோபம் வரவில்லை. இன்று ஏனோ புதுவிதமான உணர்ச்சியில் தத்தளித்துக் கொண்டிருந்தாள்.

அவள் அருகில் வந்து நின்றான் கதிர். இவன் தன் பழைய காதலைச் சொல்லி சிலாகிக்க வந்திருக்கானோ அல்லது தன் பழைய காதலைச் சொல்லிப் புதுப்பிக்க வந்திருக்கானோவென நினைந்து குழம்பினாள். அந்த நேரத்தில் கடல் கரையை அடித்து வீழ்த்த , நண்டு விரைந்தோடி தன் குழிக்குள் பதுங்கிக் கொண்டது.

“என்ன செம்பூ நல்லாருக்கியா?”

“ம், நீ”

“ஏதோ இருக்கேன்” என்று சொல்லியவன் மெல்லியக் குரலில் “செம்பூ கொஞ்சநாளா உன் ஞாபகம் அடிக்கடி வருது, அதான் உன்னப் பாக்கலாம்னு வந்தேன்”

“நானும் உன்னை பாக்கனும்னு நெனப்பேன்... ஆனா..”

“அந்த நாட்களை மறக்க முடியலடி, அதனாலதான் எப்படியாச்சும் உன்னைப் பாத்துப் பேசணும்னு வந்தேன், நீ இராத்திரி எங்க தூங்குவ” சடாரென கதிர் கேட்டதும் அதிர்ந்தாள்.

“எங்கேன்னா...”

“இல்ல, இரவுல சந்திக்கலாம்னுதான்” கதிரை ஒரு மாயக்கள்ளனாய் உணர்ந்தாள்.

“இல்ல கதிரு, நான் எப்படியெப்படியோ நெனச்சிட்டேன் போல... நீ ஒன்னு செய்யீ, மொதல்ல எனக்குத் தாலி கட்டு, பிறகு இரவென்ன பகல்லயே வரேன்” ஆற்றாமையும் கோபமும் கலந்து கூறினாள்.

“ஏய், எனக்குக் கல்யாணமாகி ரெண்டு புள்ளவ இருக்கு தெரியும்ல உனக்கு, நீ தாலி அறுத்துட்டு வந்து நிக்கறவ... ரொம்ப பண்ணாதே” பேசிக்கொண்டு அவள் கையை இறுகப் பற்றினான்.

“ஆம்பள புத்திய காட்டிட்டேல்ல, நம்ம தடம் மாறிப் போன காதல பேசித் தீக்க வந்திருப்பேன்னு நெனச்சேன்.. எல்லா ஆம்பள மாதிரி சட்டுனு என் ஒடம்புக்குள்ள நொழயப் பாக்குற” வெடுக்கென பற்றிய கையைத் தட்டிவிட்டுச் சற்றே கோபத்தோடு பேசிவிட்டு அவ்விடத்தை விட்டு வேகமாக நடந்தாள். அப்போது அவள் மாமங்காரன் ஆறுமுகம் எதிரில் வந்து

கொண்டிருந்தான். கதிரிடம் பேசியதைப் பார்த்திருப்பானோ என எண்ணியபடியே நடந்தாள். மாமங்காரன் தன்னை சாடையாகப் பார்ப்பதாக உணர்ந்தாள். கடல் எப்போதும்போல் நண்டைத் துரத்துவதிலேயே குறியாக இருந்தது.

தான் உண்மையில் சொள்ளைதானா? நண்டுல ஒரு வகையத்தான் சொள்ள நண்டுனு சொல்வாங்க. நண்டுக்கு அதன் ஓடுதான் வலிமை. அவ்ளோ சீக்கிரம் நண்டு ஓட்ட பேக்க முடியாது. களிநண்டு சொல்லவே வேணாம். அவ்ளோ கஷ்டம் கடிக்க. ஆனா சொள்ள நண்டு அப்படியில்லே. அதன் ஓடு கடினத்தன்மையோட இருக்காது. மேலே நெகிழித் தாளைத் தலமேல கவுத்தனா போல இருக்கும். கொழம்பு வச்சாலும் ருசிக்காது. உள்ளே சதையும் அவ்வளவா இருக்காது. வேற வழியில்லாமத்தான் அத சமைச்சி சாப்பிடுவாங்க.தனக்கேன் இந்தப் பேர் வந்தது?

எல்லாரும் சொள்ளைன்னு கூப்பிடறப்ப அவன் எப்படி கூப்பிட்டான்? . செம்பூ ன்னு கூப்பிட்டான். தன் பெயர் செம்பூவை என்பதே மறந்துவெகுநாளாயிற்று.ஊர்களில்பெத்தவங்க வச்ச பேர் ஒன்னுன்னா பட்டப்பேர் வச்சிக் கூப்பிடுறது வேறாயிருக்கும். அது வழிவழி வந்த மூதாதையர் பேராயிருக்கலாம், பழக்கவழக்கத்த வச்சிக் கூப்பிடுற பேராயிருக்கலாம், இப்படி நெறய காரணம் இருக்கு.. தனக்கு என்ன காரணம் இருக்கமுடியும்? யார் என்ன சொன்னாலும் கேட்டுகிட்டு, அதிர்ந்து பேசாததனாலயா? தான் எதுக்கும் லாயக்கில் லேனு அவங்க நெனக்கறதாலயா? தனக்குள்ளே பல கேள்விகளைக் கேட்டபடி வீடு கிட்ட வந்து சேர்ந்தாள்.

“அடி சொள்ள, எங்கடி போய் தொலஞ்ச, உன் அண்ணிக்காரி உன்ன மீன் ஆயச்சொல்லி தேடிக்கிட்டிருந்தா… சீக்கிரம் போ, காண்டு வந்து கத்தப்போறா”

வேலியாண்ட ஒக்காந்திருந்த அவள் அம்மா அதட்டி அனுப்பினாள். திண்ணையில்



# என்னவென்று சொல்வது...

எழும்போதே
இயலவில்லை தான் ஆனாலும்
கடமையையும் பொறுப்பையும்
கூட்டிக் கழித்து கிளம்பி போயாயிற்று...

ஒரு மணி நேரம் கூட தாண்டவில்லை
இருக்கை உறுத்திற்று...
சட்டென எழுந்து நடக்கவும்
நம்பிக்கை இல்லை...
உடல் சோர்வாய்
மனது வெறுமையாய்...
யாரிடமும் பேச விருப்பமில்லை
ஏனோ எட்டி எட்டி பார்க்கிறது அழுகை
அவ்வப்போது எரிச்சலும்....

கொஞ்சம் மூடிக்கொள்ள
கெஞ்சும் கண்கள்....
கொஞ்சம் சாய்ந்துகொள்ள
ஏங்கும் உடல்.....

வீட்டுக்கு போகலாமா என
எண்ணும்போதே,
என்ன சொல்லிவிட்டு செல்வது
ஒரே சிந்தனை..

கடு கடுக்கும் இடுப்பையும்
பின்னி எடுக்கும் கால் வலியையும்
குழம்பி தவிக்கும் மனதையும்
என்னவென்று சொல்வது...

எல்லா நாட்களையும் போல
சில நாட்களை எளிதாய் கடந்து
விடமுடியாதென எப்போது
புரியும் உங்களுக்கு....

**தீபிகா சுரேஷ்**

பக்கத்துவூட்டு பவுனம்மா அக்காவிடம்... "பொழுது போயி எம்மா நேரம் காணாம். எங்க போய் தொலஞ்சாலோ, எப்பப்பாரு மேச்சல்லயே இருக்கறது. புருசன சாவக்கொடுத்தவ மாதிரியா இருக்கா. சோடிச்சிகிட்டு சிங்காரம் பண்ணிக்கிட்டு கௌம்பிடறே.. அவமானமா இருக்கு.." அண்ணிக்காரி சொல்வதற்குள் இவள் கொட்டாயில் நுழைந்து குண்டானில் மீன் எடுத்து வந்து மீன ஆய உக்காந்தாள்.

"பாப்பா... இம்மாநேரம் எங்க போச்சாம்" எளக்காரமாகக் கேட்டாள் அண்ணி.

"எம்மவள காணாம், கடலாண்ட வெளயாடறன்னு சொல்லிச்சி பச்சமாக்கா.. அதான் தேடிகிட்டுப் போனேன். ."

"நல்லா இருக்கு நாயம் நடுவுல இருக்கு சாயம்... இம்மாநேரம்.. இந்தத் திண்ணைல படுத்து கெடந்தா உம்மவ.. இப்பதான் பச்சம்மா கடக்கிப் போயி மாங்கா வாங்கியாற அனுப்பியிருக்கேன்" நக்கலாகப் பேசினாலும் ஒரு வார்த்தை எதித்துப் பேசமாட்டாள்.

'எல்லாரையும போல ஏன் நான் தல சீவக்கூடாது? பொட்டு வக்கக்கூடாது? பூ வைக்கக்கூடாது? ஏக்கமாயிருந்தது அவளுக்கு. மத்த பொண்ணுகளப் போல் சோடிச்சிகிட்டுப் போகணும்னு ஆச அடிக்கடி வருவதை உணர்ந்தாள். அதுகூட வேறொரு ஏக்கமும் வருது. அதைக் கண்டு தனக்குள்ளே பயந்தாள். அது தன்னை விழுங்கிவிடக்கூடும் என்பதாலும் இருக்கலாம். ஆனா அந்த ஆச தன்னை இரவிலும் தூக்கத்திலும் துன்பப்படுத்துவதை உணர்ந்தாள். அத வெளியில் சொல்லி ஆறுதல் அடைய முடியாத ஒன்று என்பதையும் அறிந்திருந்தாள்.

பத்தாவது படிக்கறப்ப இந்தக் கதிர காதலிச்சேங்கறதாலயே தன்னைக் கேக்காம அடியும்புடியுமா அந்த மரக்காணத்தானுக்குக் கட்டிவச்சாங்க. அழுதுபுரண்டபோதும் ஒத்துக்கிடலை. கல்யாணமாகி வருசம் ஒன்னாகிறதுக்குள்ள போட்டுக்குப்

---

# கீழடி

கீழடி இது எங்கள் தமிழ்குடி
எது நாகரீகம்
யாருக்கு யார் கற்றுத்தருவது
சிந்துவெளியல்ல
இனி வைகையாற்றுப்படுக்கைதான்
உலக நாகரீகங்களின் தாய்
உலக கட்டிடக்கலையை வியக்கும் தமிழா
உன் பாட்டனுக்கு பாட்டன்
செங்கல்களையும் சுட்டு
கட்டிவைத்திருக்கும் அறிவுக்கூர்மைப்பார்
கழிவுநீர் போக்கிகள்
கலைநயத்துடன் சுவர்கள்
ஆபரணங்கள்
பானை ஓடுகளில் பெயர்களைப்பொறித்து
எழுத்தறிவு பெற்ற சமூகமாக
ஆறாம் நூற்றாண்டிலேயே
அறிவுபெற்றுவிட்டான் தமிழன்..
சங்க பாடல்கள் புனைவுகள் அல்ல
புதைந்து கிடக்கும் தமிழனின்
மிக உயர்ந்த நாகரிகத்தின் அடையாளம்
கீழ் தோண்டிப்பார்
அடியில் கிடக்கிறது
தமிழனின் வேர்.
மண்ணின் வயதுதான்
தமிழனின் வயது
மண்ணின் வயதுதான்
தமிழ்மொழியின் வயதும்.

**- ஈழபாரதி**



போயி, புயல்ல சிக்கிக் கடல்ல கரைஞ்சிப் போயிட்டாங்கற செய்தி மட்டுந்தான் வந்தது. அவன் காணாப் பொணமாகிட்டான்... கருமாதி செய்ய கையோடு பொறந்த வூட்டுக்கு வந்தவதான். தணல்ல வெந்து தணியறாப்போல அவ வாழ்க்கை அமைஞ்சிட்டுது. ஆமாம் அவநெல தலகீழா தொங்கற வௌவாலாட்டமா இப்படி மாறிடிச்சேன்னு கவலைப்பட்டாள்.

புருசன்வீட்ல வாழ்ந்தாள் அவ்ளொதான். ஒரு வருசத்துல வாழ்ந்த வாழ்க்கை பெரிய எந்த ஞாபகத்தயும் தேக்கி வச்சில்ல. ஆனா தாலியறுத்துக் கருமாதி முடிச்சி தாய்வீட்டுக்குக் கூட்டியாரப்ப அவனோட கொழந்தய சொமந்திருப்பது கூட அறியாதவளாயிருந்தாள். நாள்போகப் போக குழந்தையை உணர்ந்தாள். இப்ப அந்த மகளுக்கு ஐந்து வயசு.

என்ன படிச்சிருக்காள் வேலைக்குப் போவ. அடிக்கடி அம்மாவும் அண்ணியும் திட்டித் தொலைக்கறாளுக. அங்க நின்னு என்னா சிரிப்பு. ஆம்பள பையன்கிட்ட என்றால் பேச்சுன்னு. முண்டச்சியாத்தான் போயிட்டா,அதுக்குன்னு யார்ட்டயும் பேசக் கூட முடியாத அளவுக்குச் சொள்ளையாயிட்டோமே என மனசுக்குள் அழுதாள்.

இத்தனைக்கும் இவ வாழ்க்கைய யார் முடிவு செய்யறா. அம்மாளா, அண்ணனா, அண்ணியா யாருன்னே தெரியாத ஒரு கொழப்பதுல அல்லவா இவ வாழ்க்கை தொங்கல்ல ஆடுது. கட்டிக்கத் துணி, மூணுவேள சோறு, அதான் இவளோட சொர்க்கம். மத்த பொண்ணுங்கள போல ஒரு சினிமாவுக்குப் போகணும், பீச்சுக்குப் போகணும்னு ஆசக் கெடந்து அல்லாடத்தான் செய்யுது. கேட்க பயந்தாள். கேட்டால் குதர்க்கமா பேசுவா அண்ணிக்காரி.

கதிராவது பழைய காதலை நினைத்துத் தன்னைத் தாங்கவானென்ற சிறிய அல்பாசையிலத்தான் அவனைச் சந்தித்தாள்.

## சித்திரம் பேசுதடி

சுற்றத்தை போற்றிப் புகழ்ந்தே
கவலைகள் மறந்து வாழ்வோம்
கற்றதை ஏற்று நிலைப்போம்
கல்வியில் சிறந்து மகிழ்வோம் !

எண்ணத்தை என்னிடம் தந்து
வண்ணத்தை மகிழ்வினில் காட்டு
கமழ்ந்திடும் வாழ்வும் மலரும்
மகிழ்ச்சிதான் நமக்கினி வேண்டும் !

இனியதை பேசிடும் பொழுதாம்
இரவை நெருங்கிடும் நேரம்
அன்பினில் திளைப்போம் இன்று
பண்பினில் பகர்வோம் நன்று !

**தமிழ்நெஞ்சம் அமின்**

ஆனா அவளுடைய ஆசயில மண் விழற மாதிரி கேட்டதை அவளால் ஒப்ப முடியலை. காலம் மனுசங்கள எப்படி மாத்துது. அன்னக்கி உருகி உருகி காதலிச்சவனா இன்னிக்கி இப்படிப் பேசிட்டான். ஏதேதோ மனசுக்குள் ஓட மீன் ஆய அருவாமனையைத் தேடி எடுத்தாள். இந்த அருவாமன ஒரு மொக்க அருவாமன.காஞ்சப் பீயக் கூட கருக குனு வெட்டாது. இந்த அருவாமன மாதிரிதான் நாமளும் ஆயிட்டோமா என எண்ணிப்பாத்தாள்.

“கொழம்பு சுண்டிப் போவப் போவுது, எங்கயும் மெதக்காம, சீக்கிரம் ஆஞ்சி எடு.” அண்ணியின் குதர்க்கமான வார்த்தைக்கு மறுபதில் பேசியதேயில்லை. பேசத் தோணும், ஆனாலும் ஒரு பயம் மனசுக்குள் வரும்.அவவாயத்தொரந்தாகாந்தாரிமாதிரி கத்திக்கிட்டே இருப்பாள். அண்ணிக்காரி என்ன பண்றான்னு சாடையா பாத்தாள். அவ திண்ணையாண்ட ஒக்காந்து உதிரிப் பூக்கட்டிக் கொண்டிருந்தாள்.

அந்தப் பூ தன்னைப் பத்து படுகேவலமா சிரிக்கற மாதிரி தோணியது இவளுக்கு. பூமீது கொள்ளை ஆசை. தழைய தலைய பொடவ கட்டி, வகிடெடுத்து தலைய சீவி,

# வணங்குகிறேன் தாயே...

ஆயிரம் உறவுகள்
அவனியை நிறைக்க
அன்னையுன் அன்பினை
எவருண்டு நிகர்ப்ப!

தெய்வத்தை தேடினேன்
கோயில்கள் முழுக்க
ஓலைக் குடிசையில்
என்தெய்வம் இருக்க!

தூற்றுவார் போற்றுவார்
போற்றியும் தூற்றுவார்
ஏற்றிட வழிகாட்ட
உனையன்றி யாரிங்கு!

பாசத்தை வேடமாய்
அணிந்திட்ட பலருண்டு
பாசமே உருவமாய்
நீமட்டும் தானுண்டு!

குரலிலே உடல் நலம்
அறிகின்ற வைத்தியம்
வார்த்தையில் மனநிலை
உணர்கின்ற மகத்துவம்!

கண்டேனே வதனத்தில்
தியாகத்தின் ஒளிவட்டம்
தாயேயுன் அணைப்பிலே
அகன்றது துயர் மொத்தம்!

பாட்டுடைத் தலைவியை
பாடுவேன் என்சித்தம்
பாவாலே தினம் போற்றி
வணங்குவேன் உனை நித்தம்!

**- வேலணையூர் ரஜிந்தன்.**

குஞ்சலம் வச்சிக் கட்டிக்கிட்டு மல்லியப் பூவ தலை நிறைய வச்சிக்கிட்டு, எதுத்த விட்டு ஆனந்திய மாதிரி தன் வாழ்க்கை இனி மாறாதா என ஏங்கினாள். தன் புருசனோட வாழ்ந்த அந்த ஒரு வருச வாழ்க்கை அத்தனை இன்பம் நெறஞ்சதா இருந்திருக்கவில்லை. நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக நாளைத் தள்ளியதுதான் மிச்சம். நெனச்சிப் பாத்து சந்தோசப்படவோ துக்கப்படவோ முடியாத அளவுக்குத்தான் இருந்தது. எப்படியோ வாழ்ந்தா . அவ்வளவே.

“யம்மா,இந்தாமாங்கா.பச்சம்மாஆயால்ல கொஞ்சம் மீன் கொழம்பு கேட்டாங்க” மகள் அஞ்சனா கிண்ணத்தையும் மாங்காவையும் தன்முன் நீட்டினாள்.

“இதக் கொட்டாயில போயி வையிடி, இம்மாநேரம் எங்க போன”

“தோ.. பார்ரா... இவ இம்மா நேரம் எங்கயோ போயிட்டு மவள கேக்கறாளாம் மவளை. பச்சம்மா கொழம்பு கேட்டாளா.. இதுக்கொண்ணும்கொறச்சலில்லே.இவளும் மூளி, அவளும் மூளி ரெண்டுக்கும் தோது போ» சிரிச்சிக் கிட்டே கரிச்சிக் கொட்டினாள் அண்ணி. அம்மா ஏனோ இவளுக்காக ஒருபோதும் வக்காலத்து வாங்கிப் பேசியதே கெடயாது. அப்படியே அம்மா கொணந்தான் தனக்குமிருக்கோவென எண்ணினாள். அவளிடம் ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசினா ஆயிரம் வார்த்தைகளைக் கொட்டித் தீத்துடுவா அண்ணி. எங்கேர்ந்துதான் பிரவாகம் எடுக்குமோ தெரியாது. அத்தனை நுணுக்கமா கொற சொல்லுவா. அதுக்கு பேசறதவிட பேசாம இருந்துடறதே தேவலைன்னெதான் இவள் வாய்மூடிக் கெடப்பாள். தாங்காததுயரம்னா அடுப்பங்கர கொட்டாயில போயி அழுதுத் தீர்ப்பாள்.

“எங்க அந்த சனியன், எங்க அந்த சனியன்” கோபமாகத்திகிட்டேதிண்ணைல ஒக்காந்தான் அண்ணனங்காரன். மீன் ஆஞ்சி கொட்டாவுக்குள் எடுத்துக் கொண்டு போன அவளுக்கு நடுக்கமெடுத்தது.

ஏன் இப்படிக் கத்தறான்.என்னா தப்பு நடந்துட்டுது அவளுக்குப் புரியலை. ஆறுமுகம்

“சொள்ளை இத்தனை நேரம் எங்க போச்சுனு கேளுடி. கடலாண்ட எதுக்குப் போச்சின்னு கேளு. எனக்கு மானம் போவுது. இந்த மூளியால.. ஏ… யம்மா, உம்மவ லட்சணத்த பாரு… எவனான்ட பேசிட்டு வந்துச்சின்னு கேளு. இது லாயக்குப்பட்டு வராது. அவனவன உன் தங்கச்சிய அங்கப் பாத்தேன். இங்கப் பத்தேங்கறானுவ. நான் வேட்டிக் கட்டிக்கறதுக்குப் பதிலா பொடவை கட்டிக்கிட்டுப் போயிடலாம். அதக் கூப்டு என்னான்னு கேளு.” ஆங்காரமாய்க் கத்திக் கொண்டிருந்தான் அண்ணங்காரன் ராசு.

“ஓ.. இதான் விசயமா, இவ்ளோ நேரம் எங்கபோனான்னுஅலைஞ்சிகிட்டிருந்தேன் நானு. ஏய்.சொள்ள வெளில வாடி, எங்க பூந்துகிட்டிருக்கே, கோட்டானாட்டம் எங்க கழுத்த அறுக்க வந்திருக்கு.” கூட சேந்து கத்தினாள் அண்ணி.

மெதுவாக கொட்டாயிலேர்ந்து வெளிய வந்தவளகண்டதும்திண்ணயவிட்டுஓடியாந்து அண்ணன் ‘ப்ளார்‘ என அறைஞ்சான். செம்பூக்கு தலை சொழன்றது. அப்படியே தலைய புடிச்சிகிட்டு கொண்டே வாசல்ல ஒக்காந்தா. அம்மாக்காரி ஒப்பாரி வச்சி ஓங்கி அழ ஆரம்பிச்சிட்டா. அவளால அதைத்தான் செய்யமுடியும். அவளும் மவளைப் போன்று கதியற்றுக் கெடந்தாள்.

“ஒப்பாரிய நிறுத்து மொதல்ல. உம்மவ ஒழுங்குக்கு வராது இனி. எத்தினியோ மொற கண்டிச்சிப் பாத்துட்டேன். மாமா பக்கிரி எத்தினியோ தடவை சொல்லிச்சி நானும் சொல்லிப்பாத்துட்டேன். ஊரே காறித் துப்புது உம்மவளப் பாத்து, மானம் போயி உசுரு வாழறதவிட பேசாம செத்துப் போவ சொல்லு” ரொம்பவும் காட்டமாகப் பேசினான்.

அவளுக்குப் புரிஞ்சிப் போனது. இந்த மாமங்காரந்தான் வேட்டு வச்சிருக்கான். அவனுக்கு அவ கெடக்கலைனு ஆதங்கம். ஒருநா எல்லாரும் கூத்துப் பாக்கப் போயிட்டப்ப தனியா கொட்டாயில படுத்துக் கொடந்தா இவ. பூன மாதிரி கதவத் தொறக்க முயன்றான் .

“யாரு”

“நான்தான் … மாமா ஆறுமுகம்”

“என்ன இந்நேரத்துல மாமா” இரவு மணி பத்து இருக்கும், கதவைத் திறந்தாள்.

‘‘ஒனக்கு ஒடம்பு சரியில்லேனு

## கு.அ.தமிழ்மொழி கவிதைகள்

உன் சொற்கள்
என் உடலைத்
துளைத்துக்கொண்டிருக்கும் போது
வெகு இயல்பாய்
ஒரு கொலையை
நிகழ்த்திச் செல்கிறாய்
நீ!

*

அந்த மழலை
வன்புணரப்பட்டு
கொடூரமாகச் சிதைக்கப்பட்டு
தனக்கு
என்ன நேர்ந்ததென்றே
அறியாமல்
உயிர் துறக்கையில்
உங்களால் உருவாக்கப்பட்ட
ஒவ்வொரு கடவுளும்
திரும்பத் திரும்பத்
இறந்துபோகிறார்கள்

*

தோண்டி எடுத்த
எலும்புக்கூட்டில்
மண்ணுடன்
கொஞ்சம்போல
ஒட்டிக்கொண்டே இருக்கிறது
நிறைவேறாத ஆசைகள்

அக்கா சொல்லிச்சி, அதான் வந்தேன்'' கதவ தொறந்ததும் உள்ளே போய் ஒக்காந்தான். அப்படியே நலம் கேட்டுட்டுப் போயிடுவார்னு பாத்தா வூட்டுக்குள்ளே வந்து ஒக்காந்துட்டாரே. என்ன பண்றதுன்னு புரியாம நின்னாள்.

''வா, இங்க ஒக்காரு'', தன்னருகில் ஒக்காரச் சொன்ன மாமாவைப் பாத்து மொறச்சாள். தன் அப்பனைவிட பெரியவன் இந்தாளு. யாருமில்லா இந்த நேரத்துல தாங்கிட்ட பேச என்ன இருக்கு என மனதிற்குள் பொருமினாள்.

"அட, வா ஒக்காரு, உனக்கு என்னா வேணும் சொல்லு, நான் பாத்துக்கறேன் உன்னை.உம்மவளுக்கும்செய்ய வேண்டியத

## பொறுமை இழந்தால் வெறுமை

பொறுமை இல்லா உள்ளமோ வெறுமை
வறுமையிலும் பெருமை தரும் பொறுமை..
சினம்கொண்ட முகத்தில் புதையும் புன்னகை
அகம்கொண்ட பொறுமை பொழிந்திடும் அன்பை..

உலகத்தின் பொறுமையால் உரிமையாய்
வாழ்கிறோமின்று.

வெறுத்து வெறுமையில் வாழ்வதில்
பயனில்லை.

நிதானமிழந்த வார்த்தை
நீதியையும் நிராகரிக்கும்..

பண்பிழந்த நடத்தை
பகையை வளர்க்கும்..

விட்டுக்கொடுத்து வாழ்தல்
வெற்றியைத் தரும்.

பொறுத்து வாழ்ந்தால் பூமியை ஆளலாம்..

காத்தவூர்க்கவி
**எம்.பஹ்த் ஜுனைட்**
இலங்கை

செய்யறேன். நீதான் வேலக்கி வித்தக்கிப் போவாம எவ்ளோ கஷ்டப்படுறேன்னு தெரியுது சொள்ளை. நான் இருக்கேன். கவலப்படாதே'' நின்னுகிட்டிருந்த அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

"மாமா எந்திரி மொதல்ல, வூட்டுக்குப் போ.. இப்படி மோசமான நடந்தா கத்திக் கூப்பாடு போடுவேன்.. போ... போயிடு.. "இவளுடைய கண்டிப்பான வார்த்தயக் கேட்டதும் எழுந்து போயிட்டான்.அதிலேர்ந்துதன்அண்ணங்கிட்ட இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கொண்டிருக்கான் என்பதை உறுதிப் படுத்திக் கொண்டாள்.

வீட்டில் எப்படியாவது தெனம் ஒரு சண்டை நடக்க இவந்தான் காரணம் என்பதைப் புரிந்து கொண்டாள். இதை எப்படி தன் குடும்பதுல சொல்ல முடியும்? முடியாது. அப்ப இந்த மாமங்காரன் வச்ச வத்திதான் இப்பக் கொழுந்துவுட்டு எரியுது. தான் இனி இதுலேர்ந்து மீள வழியில்லையென நினைக்கும்போது கண்களில் கடல் பெருகியோடியது.

''அழுவறத பாரு... சனியன் செத்தவங் கூடயே போய் தொலஞ்சிருக்கலாம், என் மானத்த வாங்குறதுக்குன்னே வந்துருக்கு. யம்மா, நீ சொல்லு... சோறு தண்ணிக்குக் கொறவச்சமா.. துணிமணிக்கு கொற வச்சமா...இது மவளுக்கு ஒன்னுஞ் செய்யாம வுட்டுட்டமா.. சொல்லும்மா, வேற என்னா பண்ணலாம் இதை'' கடுகடுப்புடன் பேசிய அண்ணனை ஏறெடுத்துப்பார்த்தாள்.

''ஒண்ணு பண்ணலாம்னா'' சொல்லி விட்டு எல்லாரையும் பார்த்தாள்.. ஏதோ சொல்ல வருகிறாளென அண்ணன், அண்ணி, அம்மா, தன்மகள் அனைவரும் திரும்பிப் பார்த்து உறுதியாகச் சொன்னாள்.

''என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுங்க'' திடமாகச் சொன்னாள். ஒரு நிமிடக் காற்று மூச்சுப் பேச்சற்று நின்றது.

## அங்கோர் தமிழ் சங்கம் பன்னாட்டு தமிழர் நடுவம்

மற்றும்

## கம்போடிய கலை பண்பாட்டுத் துறை அமைச்சகம்

இணைந்து நடாத்திய

# உலகத் தமிழ்க் கவிஞர்கள் மாநாடு

22/09/2019 அன்று உலகத் தமிழ்க் கவிஞர்கள் மாநாட்டில் அங்கோர் தமிழ் சங்கம் பன்னாட்டு தமிழர் நடுவம் மற்றும் கம்போடிய கலை பண்பாட்டுத் துறை அமைச்சகம் இணைந்து ''சர்வதேச இளங்கோவடிகள் விருது'' கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. விருதளிப்பவர் கம்போடிய பண்பாட்டுத்துறை இயக்குனர் மோர்ன் சொபீப் அருகில் கவிஞர் விவேகா மற்றும் அங்கோர் தமிழ் சங்க நிர்வாகிகள்.

முன்னதாக 21.09.2019 அன்று கம்போடியா அங்கோர் தமிழ் சங்கம், பன்னாட்டுத்தமிழர்நடுவம்நடத்தியஉலகக் கவிஞர் மாநாடு முதலாம் நாள் நிகழ்வில் “வானம் தொடும் வண்ணத்துப்பூச்சிகள்” தன்முனைக் கவிதைகள் - 52 கவிஞர்கள் தொகுப்பு சிறப்பாக வெளியிடப்பட்டது. கம்போடிய பண்பாட்டுத்துறை இயக்குனர் மோர்ன் செப்பீப் வெளியிட மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்க தலைவர் இராசேந்திரன் பெற்றுக்கொண்டார். பாடலாசிரியர் விவேகா முன்னிலையில் வெளியானது.

தன்முனைக்கவிதைகளுக்கு பன்னாட்டு மேடையில் அங்கீகாரம் நமக்கெல்லாம் பெருமை.

மேடையில் கவிஞர்கள் சுமதிசங்கர், அன்புச்செல்வி சுப்புராஜ், இர.தர்மாம்பாள் மற்றும் ஓசூர் மணிமேகலை ஆகியோருக்கு சான்றுகள் வழங்கப்பட்டன. முனைவர் பேரா.மறைமலை இலக்குவனார், முஸ்தபா, மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்க தலைவர் இராசேந்திரன், கருமலை தமிழாழன், ஓசூர் மணிமேகலை,மலர்வண்ணன்,வணங்காமுடி, உமையவன், ரோகினி, யோ.புரட்சி,





கஸ்தூரி மற்றும் பாடலாசிரியர்கள் இந்துமதி, அஸ்மின், கவிரிஷி மகேஷ், ரவி தமிழ்வாணன் உள்ளிட்ட பல கவிஞர்கள் கலந்துகொண்டனர். விழாவில் இந்தியா மலேசியா சிங்கப்பூர் சுவிஸ் இலங்கை மொரீசியஸ் மற்றும் வளைகுடா நாடுகளைச் சேர்ந்த கவிஞர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். விழா ஏற்பாடுகளை பன்னாட்டு தமிழர் நடுவத்தின் தலைவர் சித்தர் திருத்தணிகாசலம், அங்கோர் தமிழ் சங்க தலலவர் சீனிவாசராவ் செயலர் ஞானசேகரன் மற்றும் துணைத்தலைவர் இராமேஷ்வரன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். கவிஞர்களுக்கு இரண்டுநாள் சுற்றுலாவும் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.





# மனைவியை ‘பொண்டாட்டி’ என ஏன் அழைக்கிறோம்?

பொண்டாட்டி - என்பது கொச்சையான வழக்கு.
பெண்டாட்டி - என்ற தூய தமிழ்ச் சொல்லே பொண்டாட்டி எனத் திரிந்தது.

பெண்டு + ஆட்டி = பெண்டாட்டி.

பெண்டாட்டி - என்பது அவளின் பேணும் தன்மை குறித்து அமைந்த அழகான பெயராகும்.

விருப்பத்திற்குரிய , ஆசைக்குரிய ஆட்டி , விரும்பிப் பாதுகாக்கப்பட வேண்டியவள் - என்றும் பொருளுண்டு.

பெள் = என்ற மூலம் ஆசை, விருப்பம் குறித்தது.

* பெள் + தல் = பெட்டல் > பெட்டை.
* பெண் > பேண். விரும்பு, விரும்பிப் பாதுகாத்தல்.
பேணுதல் = விரும்புதல், போற்றல்.
* பெட்பு : பெருமை ; விருப்பம் ; அன்பு ; தன்மை ;
பேணுகை ; பாதுகாப்பு.

பெள் > பெண் = பெள்ளப்படுபவள் / பேணப்படுபவள் பெண் ஆனாள்.

பெள் > பெண் > பெண்டு (ஒருமை).
பெள் > பெண் > பெண்டிர் (பன்மை).
பெளுவு = பெள்ளுதல், பேணுதல்

துக்கடா :

ஆள் - என்ற மூலத்திலிருந்து வந்த சொல் ஆண் ஆகும்.

ஆட்டி என்பதே ...
ஆண் - என்ற வழக்கிற்கு சமமான பெண்பால் சொல்லாகும்.

ஆள் + தி - ஆட்டி.

ஆட்டி - என்ற பின்னொட்டு கொண்டு அமைந்த சொற்களில் சில...

- சீமாட்டி - ( சீமை + ஆட்டி).
- மூதாட்டி (மூத்த + ஆட்டி).
- ராசாட்டி ( அரச + ஆட்டி ) - இராசாத்தி (ராணி)
- வண்ணாட்டி (வண்ணாத்தி).
- கைம்பெண்ணாட்டி (கம்னாட்டி).
- வைப்பாட்டி (வைப்பு + ஆட்டி).

**- இரவிசிவன்**

## நூல் மதிப்புரை






# சப்போட்டா

**குணநாதன் ஆறுமுகம்,** மலேசியா

'குழந்தை இலக்கிய ரத்னா' விருது பெற்ற கன்னிக்கோவில் இராஜாவின் கைவண்ணத்தில் மலர்ந்த சிறுவர் கதை நூல் 'சப்போட்டா'

குழந்தைகள் உலகத்தை, உளவியலைக் கண்டறியும் சாதனமாக இந்த 'சப்போட்டா' கதை நூல் விளங்குகிறது. பல்வேறு அறிவியல் பொழுதுபோக்கு சாதனங்கள் பெருகிவிட்ட இந்த நவீன உலகில், குழந்தைகளை வாசிப்பு என்ற நந்தவனத்திற்குள் கைப்பிடித்து அழைத்துவரும் முயற்சியை இடைவிடாது செய்து வருபவர் கன்னிக்கோவில் இராஜா.

அவரது 'சப்போட்டா' நூலில் 10 கதைகள் உள்ளன. இந்தக் கதைகளில் மிருகங்கள்தாம் பிரதான கதைமாந்தர்கள். 'குட்டையைப் பிரித்த மீன்கள்' கதையில் தொடக்கத்தில் மீன்கள் கூட்டமும், தவளை ஒன்றும் பிரிந்து வாழ முற்படுகின்றன. பின்னர் மீன்களுக்கு ஏற்படும் சிக்கல்களுக்கு உதவ தவளை முன்வருகிறது. இறுதியில் "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற தத்துவம் நிலைபெறுகிறது.

மூத்தவர்களின் வார்த்தையை மதிக்க வேண்டும் என்ற கருத்தை விளக்குகிறது "பூட்டு, சாவி எங்கே?". இளங்கன்று பயமறியாது என்பதற்கேற்ப நேகா என்ற முயலின் கதை இது. "மீசைக்காரரும் தங்க மீன்களும்" கதை நமக்கு ஆங்கில கார்ட்டூன் படங்களை ஞாபகப்படுத்துகிறது. அதோடு இரக்கக் குணம் வேண்டும் என்ற செய்தியை வாசிப்போர் மனதில் பதிய செய்கிறது.

இயற்கையை நேசிக்க வேண்டும் , மரங்கள் வளர துணைநிற்க வேண்டும் என்ற கருத்துகளை இளம் உள்ளங்களில் பதியன் போடுகின்றன சில கதைகள். "நூடுல்ஸ் கேட்ட அணில்", "சிறு பறவையின் துணிச்சல்" ஆகியவை அவற்றுள் அடங்கும். உதவும் மனப்பான்மையைக் காட்டுகின்றன "ஆமைப் பாட்டியின் பிறந்த நாள்", "புறா அக்கா" ஆகியவை.

இந்த நூலில் ஒவ்வொரு கதைக்கும் அழகான ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இது கதையைப் படிக்க மேலும் ஆர்வத்தைத் தூண்டுகிறது. நம் வீட்டுக் குழந்தைகளுக்குப் பிறந்தநாளின் போதும், தேர்வில் சிறந்த தேர்ச்சி பெற்ற போதும் ஆயிரம் பயன் தரும் நூல்களைப் பரிசளிப்போம்! இதை நூலாக்கிய வானம் பதிப்பகத்தாரும் பாராட்டுக்குரியவர்

"சப்போட்டா" அதற்குத் தகுதியான நூல். வாருங்கள்..' சப்போட்டா' விற்கு "சப்போர்ட்" பண்ணுவோம்!!!

நூல் : **மூக்கு நீண்ட குருவி**
நூலாசிரியர் : **கன்னிக்கோவில் இராஜா**
வெளியீடு : **வானம் பதிப்பகம்,**
எண். M22, 6வது அவென்யூ,
அழகாபுரி நகர், இராமாபுரம்,
சென்னை - 600 089. 91765 49991
**80 பக்கங்கள் விலை ₹50/-**

நூலை இணையவழி பெற: https://www.commonfolks.in/books/d/sappotta



# ஒத்த செருப்பு

வலதுகாலில் ஒன்றும்
இடதுகாலில் வேறொன்றுமாக
செருப்புகளை அணிபவள்
அணியும் ஆடைகளுக்கேற்ப அணிவதும்
வீட்டிற்குள் நடப்பதற்கொன்றும்
கழிவறை செல்வதற்கு
பிறிதொன்றும் இருப்பதறியாள்.

மழைக்காலத்தில்
ஓடிச்சென்று பேருந்து ஏறும்போதோ…
தேங்கிய சேற்றுநீரில் சிக்கியோ…
இணைஇழந்த
ஒற்றைசெருப்புகளே
அவளுக்கு காணக்கிடைத்தவை.

மழைக்காலத்தின் பரிசாக
கருத்த பித்தவெடிப்பேறிய
நீரில் ஊறி வெளுத்து
அவற்றின் விரல்களுக்கிடையில் புளுத்து
பிடுங்கித்தின்னும் சேற்றுப்புண்ணுக்கு,
மஞ்சளையும் விளக்கெண்ணெயும்
குழைத்து பூசுபவள்.

ஒற்றைச் செருப்பை விட்டுச்செல்பவர்கள்,
இன்னொரு செருப்பை என்ன செய்வார்கள்
என்கிற கேள்வியுடன் உறங்கச்செல்பவள்.
கனவில் தேடுகிறாள் இன்னொரு செருப்பை.

**- சக்தி அருளானந்தம்.**

# ஹைக்கூ

1..
ஈக்களோடு
போட்டியாக மக்களும்
மீன் கடையில்.

2.
சிதறிய சில்லறைகளால்
சிதறிப் போனது
அறையின் மௌனம்.

3.
எத்தனைபேர் மிதித்தாலும்
வரவேற்கிறது நல்வரவு கூறி!
வாசலில் மிதியடி!-

4.
உதிர்ந்து போனது
வேர்களுக்கு பயனாய்
புதையுறும் சருகுகள்.

5.
பிச்சை வாங்கியவன்
கொடுத்து விட்டுப் போகிறான்
தரமப்பிரபு பட்டம்.

6..
புகையும் சிகரெட்
குறைந்து கொண்டு இருக்கிறது
புகைப்பவர் ஆயுள்.

7.
சுகப்பிரசவம்
மகிழ்வில்லை மனதில்..
பெண் சிசு.

8..
சீட்டுக் கட்டு
தொட்டதும் சரிந்தது
குடும்பம்.

9.
மேய்ந்த இடம்தான்
பயப்படாமல் நடக்கிறது
பசுத்தோல் செருப்பு.

10.
தூண்டில் புழு…
பாய்ந்து பிடித்தது மீன்
மரணத்தை.

**க.தமிழ் அரசன்**

# ஒழுக்கம்



இயந்திர மாய்மாறி விட்ட உலகினில்
இன்றைய குமுகாய மிழந்த தெத்தனை
இயற்கையின் வளங்களையும் ஒழுக்க மென்றிடு(ம்)
இன்னுயிர் வரத்தினையும் நேர்மைத் திறனையும்!
உயரிய குமுகாய வளர்ச்சி யென்பது
உன்னத ஒழுக்கம்தா னென்று ணர்த்துவோம்!
செயலிலு மொழுக்கத்தைக் காட்டும் மானிடர்
செம்மையாய் வாழ்ந்திடுவர் வழிகாட் டி டுவரே!

எத்துறை கண்டிடினும் கையூட் டரசியல்
எங்கணும் நாள்தோறும் வன்முறைப் பாலியல்
இத்தரை மாந்தரெலா மின்று துன்புறும்
இழிநிலை வந்ததுவே யிழந்த பண்பினால்!
முத்தமி ழிலக்கியங்கள் முன்னி றுத்திய
முதுமொழி பின்பற்றும் முறைதா னொழுக்கமாம்!
தத்துவம் பேசுவதால் பயனொன் றுமில்லையே!
தன்னொழுக் கம்பேணினால் தலைகு னிவில்லையே!

பயிரினை வேலியது மேய்ந்தாற் போலவே
பண்பிலா மாந்தர்கள் உறவுப் போர்வையில்!
உயிரினைக் காத்திடுவோ(ம்) ஒழுக்க மேன்மையால்!
உரக்கவே யுரைத்திடுவோம் நீதிக் கல்வியால்!
துயிலுமிக் குமுகாயம் விழிக்க வேண்டுமே
துரத்திடும் கேட்டினைத்தான் கரத்தி லடக்கிட!
பயிலுவோம் நல்லொழுக்கம் பண்பு மேவிட
பாரினி லுயர்ந்திடவே தேவையே ஒழுக்கமே!

உயிரினும் மேலான ஒழுக்க மென்பது
உண்மையில் தொலைந்துபோய்விட் டதன்றோ யிதனையு(ம்)
உயிர்க்கொலை யென்றேநாம் உரைக்க வேண்டுமே!
உறவுகள் திரிந்தனவே யொழுக்கக் கேட்டினில்!
நயந்தரும் செல்வமெலாம் நாச மாகிடும்!
நல்லொழுக் கமில்லையென்றால் நாடும் கெட்டிடும்!
பயன்தரு மறிவுரையைக் கேட்டு நடந்திடில்
பண்பது வளர்ந்திடுமே பாரில் வென்றிட!

**மு. மணிமேகலை**
ஓசூர், தமிழ்நாடு



# அம்மா என்றால் அன்பு

**அ** – உயிர்
**ம்** – மெய்
**மா** – உயிர் மெய்

அம்மா என்ற சொல்லுக்கு இத்தனை அழகான பொருள் தமிழைத் தவிர வேறு எந்த மொழியிலும் இல்லை.உலகிலேயே மிக அழகான சொல் என்றால் அம்மாதான்! எந்த உயிரை எடுத்துக் கொண்டாலும் தன்னலமற்ற ஒரு உறவு என்றால் அம்மாதான். இதை நன்கு அறிந்த ஒரு அறிஞன்,, தெய்வம் பூமிக்கு வருவதில்லை. தாயைப் பதிலுக்கு அனுப்பி வைத்தான். என்று கூறினார். தன்னலமான பிள்ளைகளைப் பார்த்திருப்போம். ஆனால் தன்னலமான அன்னையை எங்கும் பார்த்திருக்க மாட்டோம்.

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
நான் பெற்ற துன்பம் என்னோடு போகட்டும்
- அம்மா

தனக்காக வாழாமல் தன் குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக தன் வாழ்நாளையே அர்ப்பணிப்பவள் தான் அன்னை என்னும் அன்புள்ளம் கொண்டவள். பணத்திற்காக வெளியூர் சென்று பணிபுரியும் மகனைப் பெற்ற தாய் கண்ணீர் மல்க எழுதிய கவிதையை ஒரு நூலில் படித்தேன். அக்கவிதை,

மகனே...
நீ பிறந்த அன்று
தோட்டத்தில் வைத்தோம்
ஒரு தென்னங்கன்று
எங்கள் வியர்வையில்
நீ உயர்ந்தாய்
நாங்கள் வார்த்த தண்ணீரில்
தென்னை வளர்ந்தது
எங்கோ இருந்து நீ ஈட்டும் பணம்
உனக்கு இன்பம் தருகிறது
இங்கே இருக்கும் தென்னை மரம்
எங்கள் இருவருக்கும்
சுக நிழலும் சுவை நீரும்
தந்துதவுகிறது
ஒருநாள்......
நீ ஈ மெயிலில் மூழ்கியிருக்கும்போது
எங்களை ஈ மொய்த்த செய்தி
வந்து சேரும்
இறுதிப் பயணத்தில்
நீ இல்லாமற் போனாலும்
தென்னை ஓலை
எங்கள் கடைசி மஞ்சமாகும்!

ஒரு அன்னையின் தவிப்பை அழகாக கூறுகிறது இக்கவிதை. ஆயிரம் பேர் நம்மிடம் அன்பு காட்டினாலும் அன்னைப் போல வருமா? பிள்ளை தன்னுடைய அன்பைப் பிரதிபலிக்காவிடினும், தாய் அதைப் பொருட்படுத்தமாட்டாள். தாயையோ தாயன்பையோ அலட்சியப்படுத்தாதீர்கள். தாயின் மனதை புண்படுத்தாதீர்கள். தாய் பாசத்தின் வேர்களினால்தான் பாரதத்தின் பண்பாட்டு மரம் பூத்துக் குலுங்குகிறது. அந்த வேர்களை யாரும் வெட்டிவிடாதீர்கள்.

பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
அக்டோபர்2019

# திமிரெடுத்தவளே!

பிரிவாற்றாமையின் தகிப்பில் அனலிடை புழுவாகிறேன்!
அழுத்தத்தின் சுமையில் வெப்பக் கோளாகிறேன்!
இதயத் துடிப்பின் வேகத்தில் ஏவுகணையை விஞ்சுகிறேன்!
உயிரை உருக்கி வானில் ஒளிக்கிறேன்!
வாழ்தலின் பொருளை உன்னில் காண விழைகிறேன்!
தொலைத்த என்னை தேடிக் களைக்கிறேன்!

நெருப்பு நதியில் கனற் கரங்களால் துளாவுகிறேன்
நீர் மேல் பரப்பு காண!மேலெழுவதாய் எண்ணி
அடி ஆழம் செல்கிறேன் நினதாறுதல் பற்ற!
நீளும் விரல்களை தீண்ட முயல்கிறேன்
நீ தொடுவானமாய் தொலைவில்!
ஒவ்வொரு சிறு குறு நொடியிலும் நினைவில்
மரித்து மீள்கிறேன் சாம்பல் பறவையாய்!

சிரைகளில் பாயும் குருதி வெடித்துச் சிதற தயாராகிறது!
நிதானமற்ற மூச்சுக்காற்று அணுஉலை நெருப்பாகிறது!
உடலில் சுரக்கும் வியர்வை கடலை விட கரிக்கிறது!
இமைகள் கனத்து விழிகள் செருகி
நிதானமிழக்கிறது மூளைச் செயலிகள்!
இறுதி உச்சரிப்பும் நின் பெயரை மொழிகிறது உரக்க
'திமிரெடுத்தவளே'
உயிர் பறவை சிறகு விரிக்கிறது மெல்ல!

**- பாடலாசிரியர் ராஜபாரதி**